மலர்-1 இதழ்-13 மார்ச் 1-15 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்



## தீய தலையெழுத்தை மங்களகரமாக மாற்றும்

# பிரம்மபுரீஸ்வரர்



# மந்திர சாஸ்திரம் கூறும் ஜெபம் செய்யும் வழிமுறைகளும் பலனும்

1. ருத்ராட்ஷம் அல்லது துளசி மாலையை பயன்படுத்தி மந்திர ஜெபம் செய்ய வேண்டும்.
2. வலது கை நடுவிரல் மற்றும் கட்டை விரலால் மட்டுமே மாலையை அழுத்த வேண்டும். ஆட்காட்டி விரலில் ஜபம் செய்தால் பலன் இல்லை.
3. 108 மணிகள் கொண்ட மாலையை பயன்படுத்த வேண்டும். உடலில் 108 புள்ளிகளில் 72000 நாடிகள் இணைவதால், அந்த பகுதியை தூண்ட இந்த 108 மணிகள் பயன்படும். மேலும் இராசி மண்டலத்தில் நட்சத்திரங்கள் அனைத்தையும் பிரிக்கும் பொழுது 108 பாகங்கள் உண்டாகிறது. ஜெப மாலையின் எண்ணிக்கை அதன் அடிப்படையில் அமையும்.
4. கிருஷ்ண மணி என அழைக்கப்படும் 109 வது மணியை தாண்டக்கூடாது. மீண்டும் ஜெபித்த வழியே மாலையை திருப்பி ஜெபிக்க வேண்டும்.
5. தர்ப்பை ஆசனம் அல்லது கம்பளித்துணியில் அமர்ந்து ஜெபம் செய்யவேண்டும். ஜெபம் செய்யும் பொழுது உடலில் மின்னூட்டம் ஏற்படும். அவை நமது உடலிலேயே தங்க வேண்டும். பூமியில் உடல் தொடாமல் இருக்க மின்கடத்தாப் பொருட்களான தர்ப்பை, கம்பளி துணியும் பயன்படும். வெறும் தரையில் அமர்ந்து ஜெபம் செய்யக்கூடாது. மேலும் தர்ப்பை ஆசனம் அல்லது கம்பளி துண்டின் மேல் ஓர் மெல்லிய வெள்ளைத் துணியை விரித்து அதன் மீது அமர்ந்து ஜெபம் செய்யவும்.
6. ஜெபிக்கும் பொழுது ஜெபமாலை வெளியே தெரியாத படி ஓர் துணியிலோ அல்லது அங்கவஸ்திரம் அணிந்து அதன் உள்பகுதியிலோ வைத்து ஜெபம் செய்ய வேண்டும்.
7. பத்மாசனம், சுகாசனம் மற்றும் சித்தாசனத்தில் அமர்ந்து ஜெபிக்க வேண்டும்.
8. தீட்சை பெற்ற மந்திரத்தை சத்தமாக சொல்லக்கூடாது. உதடுகள் அசையக் கூடாது. மனதுக்குள் உச்சரிக்கவேண்டும். மானஸ ஜெபம் என்பார்கள். நாமாவளி மந்திரங்கள் பாராயணம் செய்யும் பொழுது உரக்க சொல்லலாம். குருவிடம் பெற்ற தீட்சை மந்திரத்தை சப்தமாக ஜெபிப்பது, வெளி நபர்களுக்கு கூறுவது, எழுதிவைப்பது அனைத்தும் மந்திர யோகத்திற்கு எதிரான செயல்கள். இது போன்று செயல்பட்டால் மந்திரம் சித்தி ஏற்படுவதில் சிக்கல் உண்டாகும்.
9. எந்த ஒரு செயலும் அதற்குறிய இடத்தில் செய்தால் சிறப்பாக நடைபெறும். உதாரணமாக சமையலறையில் உணவு தயாரிக்காமல் வேறு அறைகளில் சமைத்தால் பல அசௌகரியம் ஏற்படுவது இயல்பு. இது போல மந்திரஜெபம் செய்ய ஏற்ற இடம் என சில இடங்கள் உண்டு. இடத்திற்கு ஏற்றவாறு மந்திரத்தின் பலமும், பலனும் வேறுபடும்.
10. வீட்டில் அமர்ந்து ஜெபம் செய்தால் ஒரு பங்கு பலன் கிடைக்கும். பசுவின் அருகில் அமர்ந்து ஜெபம்செய்தால் 100 மடங்கு பலன் கிடைக்கும். ஆறு மற்றும் குளக்கரையில் அமர்ந்து ஜெபித்தால் 1000 மடங்கு பலன். மலை மீது அமர்ந்து ஜெபித்தால் 10,000 மடங்கு பலன். கோவிலில் அமர்ந்து ஜெபித்தால் பல லட்சம் மடங்கு பலன் கிடைக்கும். குருவின் பாத கமலங்களுக்கு அருகில் அமர்ந்து ஜெபித்தால் கோடானு கோடி பலன் ஏற்படும் என மந்திர சாஸ்திரம் கூறுகிறது.
11. சந்தியாகாலவேளை எனும் சூரிய உதய மற்றும் அஸ்தமன காலத்தில் ஜெபம் செய்தால் அதிக பலன் உண்டு. இந்த காலகட்டத்தில் ஜெபம் செய்யாமல் மற்ற நேரங்களில் ஜெபம் செய்தால், மந்திரம் அஜபமாக உருவாகும். கிரகணம், பௌர்ணமி மற்றும் அமாவாசை காலங்களில் ஜெபம் செய்ய பன்மடங்கு பலன் ஏற்படும். மந்திர ஜெபம் செய்து வரும் பொழுது எளிமையாக ஜீரணமாகும் உணவு, மெல்லிய ஆடைகளை அணிந்து வந்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.
12. ஜெபத்தால் ஞாபக சக்தி, கூர்மையாக சிந்தித்தல், வேகமான செயல் போன்றவை ஏற்படும். நோய் உள்ளவர்களுக்கு அருகில் இருந்து ஜெபம் செய்தால் அவர்களுக்கு உடலில் முன்னேற்றம் ஏற்படுவதை காணலாம். மேலும் மந்திர ஜெபத்தை பிறர் நலனுக்கு பயன்படுத்தினால் மிக வேகமாக செயல்படும்.

– சி.ஷ்யாம் சுந்தர்



# பக்தியின் வகைகள்

இறைவனிடம் பக்தி செலுத்துவது எப்படி என்று பலருக்கு பல குழப்பங்கள் உள்ளன. உண்மையில் ஆத்மார்த்தமாக கடவுளை நம்பினாலே அதுவே மிகச் சிறந்த பக்தியாகும். இப்படி பக்தியைப் பற்றி நமது முன்னோர்கள் பல்வேறு வகையில் வகைப்படுத்தியுள்ளனர். அந்த பல்வேறு வகை பக்தியில் முக்கியமான ஒன்பது வித பக்தியை பார்ப்போம்.

- **சிரவணம்** பகவானுடைய நாமங்களையும், அவனுடைய கல்யாண குணங்களையும் கேட்பது.
- **கீர்த்தனம்** பகவானின் பெருமைகளைப் பேசுவது..
- **ஸ்மரணம்** எப்பொழுதும் பகவானை நினைத்துக் கொண்டிருப்பது
- **பாத சேவனம்** பகவான் கால்களில் விழுந்து வணங்குவது
- **வந்தனம்** பகவானை வணங்குவது, அவனைப் போற்றுவது
- **அர்ச்சனம்** பகவானுக்கு மலர்களையும், கனிகளையும் கொடுத்து மகிழ்வது
- **தாஸ்யம்** பகவானின் வேலைக்காரனாக நடந்து கொள்வது
- **ஸக்யம்** பகவானிடம் நட்பு கொள்வது.
- **ஆத்ம நிவேதனம்** பகவானுக்காகத் தன் உயிரையே தியாகம் செய்வது

இராமாயணத்தில் இந்த ஒன்பது வகையான பக்திக்கும் சிலரை உதாரணமாகக் கொள்ள முடியும்.

**சிரவணம் பக்தி** அனுமார் இராம நாமத்தை உச்சரித்துக் கொண்டே இருந்தவர்.

**கீர்த்தன பக்தி** வால்மீகி இராமாயணம் இயற்றியவர்.

**ஸ்மரண பக்தி** சீதை அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்ட சீதை இந்த பத்து மாதம் இராமனையே நினைத்திருந்தாள்..

**பாதசேவன பக்தி** பரதன் இராமனின் பாதுகையை இராமனாக நினைத்து வணங்கியவன்.

**வந்தன பக்தி** வீபீஷணன் இராவணனின் தம்பியானவன், இராமனையே வணங்கி வந்தான்.

**அர்ச்சன பக்தி** சபரி இராமனுக்கு நல்ல பழங்களைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பழத்தையும் தானே கடித்துப் பார்த்து அளித்தவள்.

**தாஸ்ய பக்தி** இலட்சுமணன் இராமனுடனேயே இருந்து அவரதி சொல்படி நடந்தவன்.

**ஸக்ய பக்தி** சுக்ரீவன் இராமனுடன் நட்பு கொண்டவன்.

**ஆத்ம நிவேதனம்** ஜடாயு இராவணனிடமிருந்து சீதையைக் காப்பாற்ற முயன்று தன் உயிரைக் கொடுத்தவர்.










## மற்றவர்களும் பயன்பெற

## அறிமுகப் படுத்துங்கள்....

ஆன்மீக மலர் மெயில் புத்தகத்தில் இதுவரை 8,000க்கும் மேற்பட்ட அன்பர்கள் தங்களது மெயில் முகவரியை பதிவு செய்துள்ளனர். பதிவு செய்த அனைவரின் இமெயில் முகவரிக்கு மாதம் இருமுறை நமது இதழ் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். இந்த சேவையைப் பற்றி அறியாத ஆன்மீக அன்பர்களும் பயன் பெற, நமது வாசகர்கள் உதவ வேண்டும். அவர்களது இ-மெயில் முகவரியையும் பதிவு செய்ய உதவுங்கள். பதிவு செய்த அன்பர்கள் மீண்டும் பதிவு செய்ய வேண்டியதில்லை.

தெரியாதவர்களுக்கு நமது சேவையை தெரியப்படுத்துங்கள்.

உங்கள் மெயில் முகவரியை பதிவு செய்ய

**aanmeegamalar@gmail.com**

**whatsapp: 7299992699**

# தீபாராதனை ஏன்?

## சின்ன சின்ன ஆன்மிக மலர்கள்

- இந்து மதத்தில் வழிபாட்டிற்கென்று பல்வேறு வழிமுறைகள் உள்ளது. அனைத்து வழிமுறைகளும் மிகவும் எளிதாகவும், அனைவரும் செய்யும் வகையிலும் நமது முன்னோர்கள் அமைத்துள்ளது சிறப்பிலும் சிறப்பாகும். அந்தவகையில் ஒருசில வழிமுறைகளை நாம் பார்ப்போம்.
- நம் வீட்டில், கோயில்களில் கற்பூர தீபாரா தனையும், நெய்விளக்கு தீபாராதனையும் காட்டப்படுகின்றன. கற்பூரமும் நெய்விளக்கும் கடைசிவரை எரிந்து போகும். எதுவும் மிஞ்சாது.
- மனிதன் இறந்த பிறகும் இதே நிலை தான். எஞ்சும் சாம்பல் கூட தண்ணீரில் கரைக்கப்பட்டு விடுகிறது. இந்த தத்துவத்தை உணர்த்தவே கோயில்களில் தீபாராதனை காட்டப்படுகிறது.
- மற்றவகை வழிபாடுகளில் பிரசாதமாக ஏதேனும் மிஞ்சும். ஆனால், கற்பூர வழிபாட்டில் எதுவுமே மிஞ்சாது.
- நாமும் கற்பூரத்தை போல் நம்மை முழுவதுமாக இறைவனுக்கு அர்ப்பணித்து வழிபட்டால் இறைவனது ஜோதி தரிசனம் கிடைக்கும் என்பதையே கற்பூர தீபாராதனை உணர்த்துகிறது.
- விநாயகப்பெருமானின் பெருவயிறு, இந்தப் பிரபஞ்சம் முழுவதும் இறைவனுக்குள் அடக்கம் என்பதை உணர்த்தும் அறிய தத்துவமாகும்.
- சிவன் சன்னதியில் பிரதட்சிணம் செய் யும்போது நந்திதேவரையும் சேர்த்தே பிரதட் சணம் செய்தல் வேண்டும். அதைவிடுத்து சிவனுக்கும் நந்திக்கும் இடையே சென்று கோவிலைச் சுற்றி வருதல் கூடாது.
- ஹ்ருதய கமலம், நவகிரக கோலங்கள், ஐஸ்வர்ய கோலம், ஸ்ரீ சக்கர கோலம் போன்றவற்றை மஞ்சள் பொடியினாலும், அரிசி மாவினாலும் மட்டுமே போடுவது குடும்பத்திற்கு நற்பலனை தரும்.
- பூஜை சாமான்களை எவர்சில்வர் தட்டுக்களில் வைக்கக்கூடாது. வெள்ளி பித்தளை, செம்பு வெண் கலம் ஆகிய தட்டுகளிலேயே வைக்க வேண்டும்.
- பசுவின் உடலெல்லாம் பாலாக இருப்பினும், அதை கறந்து வெளிப்படுத்தும் இடம் அதன் மடிதான். அது போல பகவான் அருளைச் சுரக்கும் இடம் ஆலயமாகும். எனவே திருக்கோவில்களுக்குச் சென்று இறைவனை வழிபடுவதால், நம் வினைகள் யாவும் வெந்து, எரிந்து நீராகி, நம் விருப்பங்கள் நிறைவேறுகின்றன.
- சிதம்பரத்தைத் தரிசித்தாலும், காசியில் இறந்தாலும், திருவாரூரில் பிறந்தாலும், திருவண்ணாமலையை நினைத்தாலும் மோட்சம் கிட்டும் என்பது ஆன்றோர் முடிவு.
- காவி பட்டை போட்டு கோலம் போடுவது சிவசக்தியை குறிக்கும்.மங்களமான நாட்க ளில் இதை போட வேண்டும்.சகல நன்மை தரும்.
- விநாயகனை ஒருமுறை வலம் வரவேண் டும். சிவ பிரானை மூன்று முறையும், அம்பாளை நான்கு முறை யும், முருகனை மூன்று முறையும் சுற்றி பிரதட்சணம் செய்தல் வேண்டும்.
- காலையில் படுக்கையில் இருந்நு கண் விழித்தெழுந் ததும் அவரவர் உள்ளங் கையில் கண் விழிப்பதே நற் பலன்களை நல்கும் என்பது இந்து தர்ம சாஸ்திரம் கூறும் நெறி.
- வீடுகளில் மணியடித்து பூஜை செய்து விட்டு, அந்த மணியைத் தரையின் மேல் வைக்கக்கூடாது. ஏதாவ தொரு அடுக்குப் பகுதியின் மேல் வைக்க வேண்டும்.
- ஒரு இழை கோலம் போட கூடாது .இரட்டை இழை கோலம் போடுவது மங் களம் சிறக்கும்.
- கோலங்களில் தெய்வீக யந்திரங்களுக்கு சமமான கோலங்களை பூஜை அறையில் மட்டுமே போடவேண்டும்.



BRG
bhaanraja graphics
bhaanrajagraphics@gmail.com / bhaanrajagraphics@rediff.com

SPECIALIST IN
* BookWork Designing
* Wrapper Designing
* Layout Designing
* Logo Designing
* Plamphet Designing
* Magazine Design Etc.,

89394 99598

New no.16, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Che- 024.



ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com







# மகாபாரதத்தில் சுவாரஸ்யமான பருவங்கள்

மனித வாழ்க்கையில் ஒவ்வொரு நிலைகளிலும் நமது புராண காலக் கதைகள் பல்வேறு வகையில் மிகப் பயனுள்ளதாக அமைந்து விடுகிறது அந்த வகையில் மகாபாரதத்தில் ஒரு சில மிக சுவாரஸ்யமான பருவங்களை கொடுத்துள்ளோம்.

## ஆதி பருவம்:

நைமிசக் காட்டில் முனிவர்களுக்குசௌதி மகாபாரதத்தைச் சொல்லியது பற்றியும், வைசம் பாயனரால் முன்னர் இக்கதை சனமேசயனுக்குச்சொல்லப்பட்டது பற்றி இப்பருவத்தில் விளக்கப்படுகிறது. பரத இனத்தின் வரலாறு பற்றி விளக்கமாகக் கூறும் இப்பருவம், பிருகு இனத்தின் வரலாற்றையும் கூறுகிறது. குரு இளவரசர்களின் பிறப்பு, அவர்களது இள மைக்காலம் இப் பருவத்தில் எடுத்தாளப்படுகின்றன.

## சபா பருவம்:

இந்திரப்பிரஸ்தத்தில் மயன் மாளிகை அமைத்தல், அரண்மனை வாழ்க்கை, தருமன் இராஜசூய யாகம் செய்தல் என்பன இப் பருவத்தில் சொல்லப்படுகின்றன. அத்துடன், தருமன் சூதுவிளையாட்டில் ஈடுபட்டு இறுதியில் நாடிழந்து காட்டில் வாழச் செல்வதும் இப் பருவத்தில் அடங்குகின்றன.

## ஆரண்யக பருவம்:

இது பாண்டவர்களின் 12 ஆண்டுக்காலக் காட்டு வாழ்கை பற்றிய விபரங்களைத் தருகிறது.

## உத்யோக பருவம்:

கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையே அமைதி ஏற்படுத்த எடுத்த முயற்சிகளையும், அம்முயற்சிகள் தோல்வியுற்ற பின்னர் இடம்பெற்ற போருக்கான நடவடிக்கைகள் பற்றியும் எடுத்தாள்கிறது.

## பீஷ்ம பருவம்:

இப்பருவத்தில் தான் பகவத் கீதை கிருஷ்ணரால் அருச்சுனனுக்கு அருளப்பட்டது. பீஷ்மர் கௌரவர்களின் தளபதியாக இருந்து நடத்திய போரின் முதற்பகுதியையும், அவர் அம்புப் படுக்கையில் விழுவதையும் இது விவரிக்கிறது.

## துரோண பருவம்:

துரோணரின் தலைமையில் போர் தொடர்வதை இப் பர்வம் விவரிக்கின்றது. போரைப் பொறுத்தவரை இதுவே முக்கியமான பர்வமாகும். இரு பக்கங்களையும் சேர்ந்த பெரிய வீரர்கள் பலர் இப் பர்வத்தின் முடிவில் இறந்துவிடுகின்றனர்.

## கர்ண பருவம்:

இப் பருவத்தில் கர்ணனைத் தளபதியாகக் கொண்டு போர் தொடர்வது விவரிக்கப்படுகின்றது

## சல்லிய பருவம்:

சல்லியனைத் தளபதியாகக் கொண்டு இடம் பெற்ற இறுதிநாள் போர் இப் பர்வத்தில் கூறப்படுகின்றது. இதில் சரஸ்வதி நதிக்கரையில் பலராமனின் யாத்திரையையும், போரில் துரியோதனனுக்கும், வீமனுக்கும் இடையில் நடைபெற்ற இறுதிப் போரும் விளக்கப்படுகின்றது. வீமன் தனது கதாயுதத்தால் துரியோதனனின் தொடையில் அடித்து அவனைக் கொன்றான்.

## சௌப்திக பருவம்:

அசுவத்தாமனும், கிருபனும், கிருதவர்மனும், போரில் எஞ்சிய பாண்டவப் படைகளில் பலரை அவர்கள் தூக்கத்தில் இருந்தபோது கொன்றது பற்றி இப் பர்வத்தில் கூறப்பட்டுள்ளது. பாண்டவர் பக்கத்தில் எழுவரும், கௌரவர் பக்கத்தில் மூவரும் மட்டுமே போரின் இறுதியில் எஞ்சினர்.

## ஸ்திரீ பருவம்:

இப் பர்வத்தில் காந்தாரி, குந்தி முதலிய குரு மற்றும் பாண்டவர் பக்கங்களைச் சேர்ந்த பெண்கள் துயரப் படுவது கூறப்படுகின்றது.

## சாந்தி பருவம்:

இப் பர்வம். அஸ்தினாபுரத்தின் அரசனாகத் தருமருக்கு முடிசூட்டுவதும், புதிய அரசனுக்கு சமூகம், பொருளியல், அரசியல் ஆகியவை தொடர்பில் பீஷ்மர் வழங்கிய அறிவுரைகளும் இப் பர்வத்தில் அடங்கியுள்ளன. மகாபாரதத்தின் மிகவும் நீளமான பர்வம் இது.

## அனுசாசன பருவம்:

பீஷ்மரின் இறுதி அறிவுரைகள்.

## அசுவமேத பருவம்:

தருமர் அசுவமேத யாகம் செய்வதையும், அருச்சுனன் உலகைக் கைப்பற்றுவதையும் இது உள்ளடக்குகிறது.

## ஆசிரம வாசிக பருவம்:

திருதராட்டிரன், காந்தாரி, குந்திமற்றும் விதுரன் ஆகியோர் இமயமலையில் வனப்பிரஸ்தம் ஆச்சிரமத்தில் வாழ்ந்தபோது காட்டுத் தீக்கு இரையானது இப் பர்வத்தில் கூறப் படுகின்றது.

## மௌசல பருவம்:

யாதவர்கள் தங்களுக்குள் நிகழ்த்திய சண்டையில் அவர்கள் அழிந்துபோனதை இப் பருவம் கூறுகிறது.

## மகாபிரஸ்தானிக பருவம்:

தருமரும் அவரது உடன்பிறந்தோரும் நாடு முழுதும் பயணம் செய்து இறுதியில் இமயமலைக்குச் சென்றது, அங்கே தருமர் தவிர்த்த ஏனையோர் இறந்து வீழ்வது ஆகிய நிகழ்ச்சிகள் இப் பர்வத்தில் இடம்பெறுகின்றன.

## சுவர்க்காரோகண பருவம்:

தருமரின் இறுதிப் பரீட்சையும், பாண்டவர்கள் சுவர்க்கம் செல்வதும் சொல்லப்படுகின்றன.


ஆன்மிகமலர் மெயில் புக்
1–15 மார்ச் 2017 9
www.aanmeegamalar.com



# அற்புதம் வாய்ந்த யாளி

## அற்புதம் வாய்ந்த

யாளி இந்த பெயரையும் விலங்கையும் நாம் கேள்விப்படுவது கோவில்களில் தான். அங்கு தான் இதன் சிற்பம் வைக்கப்பட்டு இருக்கும்.

இந்த யாளிக்கும் தமிழர்க்கும் என்ன சம்பந்தம் என ஆராய்வோம். அதற்கு முன் யாளி பற்றி தெரிந்து கொள்வோம்.

யாளி என்ற விலங்கை பற்றி ஆங்காங்கே கிடைத்த குறிப்புகளை வைத்து கூறுகிறேன் இதற்கென தனி நூல்கள் ஒன்று கூட கிடைக்கவில்லை அதுதான் மிக பெரிய கொடுமை.

யாளி ஒரு அரிய வகை சங்ககால விலங்கு அந்த விலங்கு அழிந்துபோன உயிரினம். அது டைனோசர் கால விலங்கு. இது நம் லெமுரியா மற்றும் தமிழ் நாட்டில் இருந்த விலங்கு, இது தான் அதிகம் பலம் கொண்ட விலங்கு.

இது சிம்மயாளி, மகர யாளி, கஜயாளி, ஞமலியாளி, பெரு யாளி (சிறிய வகை) பெருச்சாளி அல்ல அது போன்ற எலிவகையான யாளி என கூறுகிறார்கள்

யாளியில் மிகவும் பலம் வாய்ந்தது கஜயாளியும், சிம்மயாளியும்தான் இதை கண்டால் அனைத்துவிலங்குகளும் நடுங்கும் டைனோசர் உடபட. இவைதான் டைனோசர் கால காட்டின் ராஜாக்கள் ஒரு யாளி பத்து காட்டுயானைகளுக்கு சமம்,காட்டு யானை என்றால் இப்போது உள்ளவை அல்ல 10000 ஙிசி படத்தில் வருமோ அதுபோல பெரியது.

இப்படி பட்ட யாளியை நம் தமிழர்கள் எப்படி அடக்கினார்கள் என்று தானே கூறுகிறீர்கள் அது தான் நம் தமிழரின் நுணுக்கமான வீரம்.

யாளியை அடக்குபவன் மாவீரனாக இருக்க வேண்டும். அவன் சில மூலிகைகளின் பலம் கொண்டு, யாளியை அடக்கும் ஆற்றல் பெற்ற வன் கஜகேசரி ஆவன் (வீரன் என்பவன் தனி ஆட்களை சமாளிப்பவன், மாவீரன் என்பவன் நூறு வீரர்களை ஒரே போரில் சமாளிக்கும் திறன் கொண்டவன்)

இந்த மூலிகைகள் என்னென்ன என சித்தர்கள் பாடல்களில் தெளிவாக உள்ளது.சில மூலிகைகளை உண்டால் யாளியின் பலம் கிடைக்கும் என கொடுத்து இருப்பார்கள். அதை வைத்து யாளியை அடக்கி அதற்க்கு கடிவாளம் போடுவார்கள் பின் அதை தன் கட்டுபாட்டில் வைத்திருப்பார்கள்.

ஆனால் பின் வந்தவர்கள் விளக்கவுரையில் ஒரு யாளின் பலத்தோடு பெண்ணை புணரலாம் என தவறாக கொடுத்துள்ளனர். நான் தெரியா மல் தான் கேட்கிறேன், ஒரு யாளி பத்து யானை க்கு சமம் என்றால், பத்து யானை பலம் ஒரு பெண்மேல் விழுந்தால் என்ன ஆவது. சற்று கூட யோசிக்காமல் எப்படி இப்படி விளக்கம் எழுதுகிறார்கள் என தெரியவில்லை. புணர்தல் என்பதற்க்கு சந்தித்தல் என ஒரு விளக்கம் தொல்காப்பியம் கூறுகிறது

தொல்காப்பியம் (எழுத்ததிகாரம் 108)

யாளியை அடக்கிய மாவீரன் மதிப்பு மிகுந்தவ னாக இருந்திருக்கிறான், அதுவும் கஜ யாளி அடக்கிய வனை மிகபெரிய தலைவனாக மதிக்கபட்டுள்ளான். அந்த மாவீரன் பட்ட பெயராக கஜகேசரி என அழைக்கபடுவான். எல்லாம் மூலிகை மூலம்தான் என்றாலும் அதற்கும் தைரியம் வேண்டும் அல்லவா.

கோவில்களில் முகப்புகளில் இந்த யாளியின் உருவம் இருக்க காரணம் இதை கண்டால் தைரியமான விழிப்புணர்வு கிடைக்கும் என்கிறார்கள். இந்த யாளியின் எலும்புகளில் இருந்து உருவாக்கபட்டதே யாழ் இசை கருவி என்றும் குறிப்பிட்ட யாழ் மிகவும் அதிகபடியான ஒலியலைகளை கொண்டதாக இருந்தது எனவும் உயிரை கொன்றது எனவும் கூறுகிறார்கள்.

காலத்தால் இவை அழிந்து மரவகை களை பயன்படுத்தி யாழ் செய்யபட்டதாக கூறு கிறார்கள். யானை, சிங்கம் அமைப்புள்ளதை கஜயாளி என்றும், சிங்கம் போல் உள்ளதை சிம்மயாளி என்றும் ஆடுகளைபோல் கொம்பும் சிறிய வால் உள்ளதை மகரயாளி என்றும், நாய்போல் நாக்கு மிக நீளமானதை ஞமலியாளி என்றும் பெருச்சாளியை போல் உள்ள சிங்கமுக உயரம் குறைவாக உள்ளதை பெருயாளி என்றும் கூறுவர்.

யாளி குறித்த மருத்துவ பாடல்கள் கீழே

நன் முருங்கைத்தழை, நெய்வார்த்துண்ணில்
"யாளி" யென விஞ்சுவார் போகத்தில் (போர்களத்தில்)

– அகத்தியர்

நிரச்சொன்னர் மெய்யாம் தகரையை ஒத்த
யாளி(ஆழி),அன்னர்(அன்னம்),புலத்து கையான் தகரை ஒத்துகால்

– தேரையர்

யாளி கற்பனை விலங்கு அல்ல அதற்க்கு லெமுரியா கண்டம் அகழ்வாரச்சி செய்தால் தான் தெரியும் என்பதால் வெளிநாட்டவர் டைனோசர்தான் பலம் வாய்ந்த விலங்கு என்கிறார் கள், ஆனால் அங்கோர்வாட் கோவிலில் டைனோசரை காட்டிலும் யாளியின் சிற்பம் அதிகம் உள்ளது. டைனோசர்களை பார்த்து வியக்கும் ஆங்கிலேயர்கள் அதற்க்கு மேலான யாளியையே கட்டி ஆண்டுள்ளான் என்பது, தமிழனின் வீரத்தை பறை சாற்றும் விதமாக உள்ளது. கோவில்களில் இதற்கு யாளி சிற்பத்தின் மீது தமிழன் இருப்பது சான்றாக உள்ளது.

நன்றி: அகத்தியர்ஜனா சித்தர்



# திருப்பதி

## ஒவ்வொரு கிழமைக்கும் ஒவ்வொரு சிறப்பு பூஜை



உலகின் பணக்கார தெய்வம் மட்டுமல்ல, உடனடி பலன் தரும் தெய்வமாகவும் விளங்குபவர் திருப்பதி வெங்கடாசலபதி. ஏழுமலைக்கு சொந்தக்காரரான இந்த பகவானுக்கு ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொரு விசேஷமான சேவை நடைபெறுகிறது. இந்த சேவைகள் ‘வாராந்திர சேவைகள்’ என்று அழைக்கப்படுகின்றன. இந்த சேவைகளுக்கான கட்டணங்களை செலுத்திய பக்தர்கள், சேவையில் பங்கு கொண்டு வெங்கடேஸ்வர ஸ்வாமியின் அருளைப் பெறலாம். ஆன்லைன் மூலமாகவும் தேவஸ்தான அலுவலகம் வாயிலாகவும் முன்பதிவு செய்து கொண்டு இவற்றில் கலந்து கொள்ளலாம்.

அந்த வகையில் எந்த கிழமை என்ன பூஜை என்பதை விரிவாக தொகுத்துள்ளோம்.

**திங்கட்கிழமை:** திருப்பதி ஏழுமலையானுக்கு ஒவ்வொரு திங்கட்கிழமையும் காலை 6 மணிக்கு நடைபெறும் முக்கிய சேவை ‘விசேஷபூஜை’ . இந்த சேவை கோயிலின் உள்ளே இருக்கும் கல்யாண மண்டபத்தில் ஸ்ரீதேவி, பூதேவி உடனுறை ஸ்ரீமலையப்பஸ்வாமிக்கு நடைபெறுகின்றது. பிரதி திங்கட்கிழமை நடைபெறும் இந்தச் சேவை 1991ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ம் தேதி தொடங்கப்பட்டு ஆர்ஜித சேவையாக நடைபெற்று வருகின்றது.

திருமலையான் ஆலயத்தில் இரண்டாவது அர்ச்சனை, இரண்டாவது நைவேத்தியம் நடைபெற்ற பிறகு மலையப்ப ஸ்வாமி கல்யாண மண்டபத்தில் எழுந்தருள்கிறார். வைகானச ஆகம சாத்திர முறைப்படி ஹோமங்கள் நடைபெற்ற பின்னர், உத்ஸவ மூர்த்திக்கு திருமஞ்சனம் நிர்வகிக்கப்படுகிறது.. இந்தச் சேவையில் பங்கு பெறுபவர்களுக்கு பிரசாதம் அளிக்கப்படுகின்றது.

**செவ்வாய்க்கிழமை:** ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் காலை 6 மணிக்கு இரண்டாவது அர்ச்சனையாக 108 தங்கத் தாமரைகளால் மூலமூர்த்திக்கு நடைபெறும் அர்ச்சனை நிகழ்ச்சியே ‘அஷ்டதள பாத பத்மாராதனம்‘ சுமார் 20 நிமிடம் இந்த நிகழ்ச்சி நடைபெறும்.

1984ம் ஆண்டு திருமலை திருப்பதி தேவஸ்தான பொன் விழாவை முன்னிட்டு அறிமுகப்படுத்தப்பட்ட சேவையாகும். ஐதராபாத்தைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் பக்தர் இதற்குத் தேவையான 108 தங்கத் தாமரைகளை காணிக்கையாக சமர்ப்பித்தார். பின்னர் இது ஆர்ஜித சேவையாக அறிவிக்கப்பட்டது. 108 தங்கத் தாமரையால் அர்ச்சனை நடக்கும்போது பக்தர்கள் மகிழ்ச்சியுடன் எம்பெருமானை தரிசிக்கலாம்.

**புதன்கிழமை:** ஒவ்வொரு புதன்கிழமையும் காலை 6 மணிக்கு தங்கவாயில் முன்பு நடைபெறும் பிரதான சேவை ‘சஹஸ்ரகலசாபிஷேகம்‘ போக ஸ்ரீநிவாச மூர்த்தியுடன் ஸ்ரீதேவி பூதேவி உடனுறை திருமலையப்பர் ஸ்வாமிக்கும் இந்த சஹஸ்ரகலசாபிஷேகம்




ஆன்மிகமலர் மெயில் புக்

நடைபெறும். 1511ம் ஆண்டுக்குமுன்பிருந்தே இந்த சஹஸ்ரகலசாபி ஷேகம் நடைபெறுவதற் கான ஆதாரம் உள்ளது. தங்கவாயில் முன்பு நடைபெறும் இந்த சஹஸ்ர கலசாபிஷேகத்தில் ஆர் ஜித சேவைக் கட்டணம் செலுத்தி பக்தர்கள் பங்குகொள்ளலாம். எம் பெருமானை தரிசித்து பிரசாதம் பெற்றுச் செல் லலாம்.

**வியாழக்கிழமை:** பிரதி வியாழக்கிழமை தோறும் வெங்கடேசப் பெருமாளுக்கு இரண் டாவது அர்ச்சனைக்குப் பிறகு நடைபெறும் நிவே தனம் ‘திருப்பாவாடை சேவை’ ஆகும். இதை ‘அன்ன கூடோத்ஸவம்‘ என்றும் கூறுவார்கள்.

வியாழக்கிழமை காலை 6 மணிக்கு எம்பெருமான் மூலமூர்த்திக்கு அணிந்துள்ள ஆபரணங்கள் அனைத்தையும் களைந்து விடுவார்கள். பின்னர் பெருமாளுக்கு இடப்படும் திருநாமத்தின் அளவை நன்றாகக் குறைத்து கண்கள் நன்றாக தெரியும் படிச் செய்வார்கள்.

வெங்கடேசப்பெருமாளுக்கு எதிராக மலை போன்று புளியோதரையை குவித்து வைப்பர். புளியோதரையுடன் ஜிலேபியையும், முறுக்கையும் வைத்து பூவினால் அலங்கரிப்பர். இந்த புளியோதரையை நேராக கருவறையில் உள்ள எம்பெருமானுக்கு நிவேதிப்பர். இச்சேவையில் ஆர்ஜிதம் செலுத்தும் பக்தர்களும் பங்கு கொள்ளலாம். இச்சேவையின் போது வேத பண்டிதர்கள் வேத பாராயணம் சொல்லிக் கொண் டே இருப்பார்கள். பின்னர் பக்தர்களுக்கு இச் சேவையுடன் ஸ்வாமி நேத்ர தரிசனமும் உண்டு.

பிரதி வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு எம்பெருமானுக்கு நடைபெறும் தோமாலை சேவையை ‘பூவங்கி சேவை’ என்பர். ஆனால், இந்தச் சேவை மட்டும் முழுமையாக ஏகாந்தமாக நடைபெறும். ஜீயர் ஸ்வாமிகள் எடுத்துக்கொடுக்க பூமாலையை அர்ச்சக ஸ்வாமிகள் எம்பெருமான் திருமேனியில் அணிவிப்பர். எம்பெருமான் பூவை ஆடையாக அணிந் திருப்பது போன்று அது காட்சியளிக்கும். இந்த சேவை ஆன பிறகு பிரதி வியாழக்கிழமை இரவு பக்தர்கள் இந்த அலங்காரத்தில் எம்பெரு மானை தரிசிக்கலாம்.

வெள்ளிக்கிழமை: ஸ்ரீவெங்கடேஸ்வர ஸ்வாமி மூலமூர்த்திக்கு ஒவ்வொரு பிரதி வெள்ளிக்கிழமை விடியற்காலை 5 மணிக்கு அபிஷேகம் நடைபெறுகிறது. இந்த வெள்ளிக்கிழமை அபி ஷேகத்தை பகவத் ராமா நுஜாச்சார்ய ஸ்வாமிகள் துவக்கிவைத்துள்ளார். அவர், எம்பெருமானின் திருமார்பில் உறையும் ‘தங்க அலர்மேல் மங்கை’ உருவத்தை அலங்காரம் செய்து, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இந்த அபிஷேகம் நடைபெறும்படிக்கு ஏற்பாடு செய்தார்களாம். இந்த சேவை பகவத் ராமாநுஜர் காலத்தில் இருந்தே நடைபெற்று வருகிறது.

ஆகாசகங்கை தீர்த்தத்தால் அபிஷேகம் முற்காலத்தில் எம்பெருமான் நித்திய அபிஷேக சேவை கைங்கர்யத்தில் ஈடுபட்ட மகா பக்தர் திருமலைநம்பி வம்சத்தவர் கொண்டு வந்த குடத்தை முதலில் பக்தி பிரபத்தியோடு தங்கச் சங்கில் ஆகாசகங்கை தீர்த்தத்தை எம்பெருமான் சிரசின் மீது பொழிந்து ஹரி: ஓம் ஸஹஸ்ரசீர்ஷா: புருஷ: என்று புருஷசூக்தத்தினை தொடங்குவார். குலசேகரப் படிக்கு வெளியே உள்ள பண்டிதர்கள் புருஷசூக்தத்தினை ஜீயர் ஸ்வாமிகள் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து பிறருக்குக் கேட் கும்படி உச்சரிப்பர். இவர்கள் அபிஷேகம் நடை பெறும் வரையிலும் பஞ் சசூக்தங்களையும் சேவித்துக் கொண்டே இருப்பர். ஆகாசகங்கை தீர்த்தத்தினால் அபிஷேகம் செய்கின்ற வரையிலும் ஸ்வாமி திவ்யமங்கள மூர்த்தியைப் பார்த்து பக்தர்கள் அந்த அபிஷேகத்தை தாமே செய்வதைப் போன்று எண்ணி, மெய் மறந்து போவார்கள்.

புனுகு, கஸ்தூரி, ஜவ்வாது முதலான சுகந்த பரிமளத்துடன் ஆகாச கங்கை தீர்த்தத்தால் சுமார் ஒரு மணி நேரம் அபிஷேகம் நடைபெறும். அதன்பின்னர் மஞ்சளினால் ஸ்வாமியின் திருமார்பில் உறைந்துள்ள மஹாலக்ஷ்மிக்கும் இந்த அபிஷேகம் நடைபெறும்.

## நிஜபாத தரிசனம்

பிரதி வெள்ளிக்கிழமை அபிஷேகத்துக்குப் பிறகு அபிஷேக சேவையில் பங்கு கொள்ளும் பக்தர்கள் எம்பெருமானை தரிசித்துச் சென்ற பின்னர் ‘நிஜபாத தரிசனம்‘ தொடங்கும். ஸ்வாமியின் நிஜபாதத்தை எவ்வித கவசமும் இல்லாது தரிசிக்கலாம். இந்த தரிசனத்தில் மட்டுமே எம்பெருமானின் திருவடிகளை தரிசிக்க ஏதுவாகிறது. மற்ற நேரங்களில் அந்த திருவடிகளுக்கு தங்கக் கவசம் வேயப்பட்டிருக்கும்.





# தொலைந்து போன நிம்மதி

சின்மயானந்தர்



ஒருவர் ஒரு வங்கியில் பணம் எடுத்துக்கொண்டு, பணப்பெட்டியை பின்னால் மாட்டிக்கொண்டு டூவீலரில் வேகமாகச் செல்லுகிறார். வண்டியின் அதிர்வில் அந்தப் பெட்டி லேசாகத் திறந்துகொண்டு, 100 பத்துரூபாய்நோட்டுகள் கொண்ட ஒரு கட்டு கீழே விழுந்துவிடுகிறது. அது தெரியாமல் அந்த நபர் வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றுவிடுகின்றார். (அந்த நபர் இக்கதையில் இனி வரமாட்டார்)

கீழே விழுந்த வேகத்தில் 100 பத்துரூபாய்நோட்டுகள் கொண்ட அந்த கட்டிலிருந்து ஒரே ஒரு பத்துரூபாய்நோட்டு மட்டும் விடுபட்டு காற்றில் பறந்து சிறிது தூரத்தில் கிடக்கிறது.

அந்த ஒற்றை பத்துரூபாய்நோட்டு இருந்த வழியில் ஒருவன் வருகிறான். இந்த நோட்டைக் கண்டு, ‘இன்று நரி முகத்தில் விழித்திருக்கிறேன் போல’ என நினைத்து, மிகவும் சந்தோஷமடைகிறான். அந்த நோட்டை எடுத்துக்கொண்டு ஹோட்டலுக்குப் போனான். இரண்டு இட்லி ஒரு காப்பி (அன்றய விலைவாசியில்) சாப்பிட்டான், அருகிலிருந்த பிள்ளையார் கோவில் உண்டியலில் மீதியிருந்த ஒரு ரூபாயைப் போட்டு, பிள்ளையாருக்கு நன்றி சொன்னான். சந்தோஷமாக வீடு திரும்பினான்.

மீதி 99 பத்துரூபாய்நோட்டுகள் கொண்ட கட்டு அது விழுந்த இடத்திலேயே கிடந்தது. அந்த வழியாக ஒருவன் வந்தான். இந்த நோட்டுக்கட்டைப் பார்த்தான். எடுத்தான்.

பரபரவென்று எண்ணினான். 99 நோட்டுகள்.

மீண்டும், மீண்டும் பலமுறை எண்ணினான்.

99 நோட்டுகள்தான்.

வங்கியில் 99 நோட்டுகள் கொண்ட கட்டு கொடுக்கமாட்டார்களே....

அந்த ஒற்றை பத்துரூபாய்நோட்டு இங்கே பக்கத்தில் எங்கேனும்தான் கிடக்க வேண்டுமென்று தேட ஆரம்பித்தான்...............

அந்த ஒற்றை பத்துரூபாயைத்

தேடினான்.... தேடினான்.... தேடினான்....

இன்னும் தேடிக்கொண்டிருக்கிறான்

என்று சொல்லி கலகலவென்று சிரித்தார் பூஜ்ய குருதேவ் அவர்கள்.

பத்து ரூபாய் கிடைத்தவன் திருப்தியாக சாப்பிட்டுவிட்டு சந்தோஷமாக சென்றான்.

990 ரூபாய் கிடைத்தவன் அதை அனுபவிக்காமல், இன்னம் ஒரு பத்து ரூபாய்க்காக அல்லாடிக்கொண்டிருக்கிறான்.



# குருசிஷ்ய உறவு

புறங்கண்ணை திறக்கவைப்பதற்கு விடியலில் கதிரவன் வரவேண்டும். அகக்கண்ணைத் திறக்கவைப்பதற்கு இளவயதிலேயே 'ஆசான்' வரவேண்டும் என்று கூறுவர். இங்கே 'ஆசான்' என்ற சொல்லிற்கு 'ஆசிரியர்' எனப்பொருளாகும். கல்வி கற்க வைப்பது ஆசிரியர். நம்மை படைத்த இறைவன் நமக்குள்ளே அவனையும் வைத்துதான் படைத்துள்ளான். அதனால், நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு உயிரினமும் இறைவனை சுமந்தவாறேதான் பிறந்துள்ளோம். நமக்குள்ளிருப்பது இறைவன் அல்லது பரம் பொருளின் ஒரு பொறியான ஆன்மா. அந்த ஆன்மாவை நாம் ஒவ்வொருவரும் திரும்ப இறைவினிடத்தில் சேர்த்தே ஆக வேண்டும். அது நம் கடமை மட்டுமின்றி பொறுப்பும் கூட. அதற்காகத்தான் நாம் பூமியில் பிறந்து வந்துள்ளோம். இது இறைவனின் சோதனையாகும்.

அவ்வாறு நாம் பூமிக்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில் நமக்குள்ளே கட்டுண்டு கிடக்கும் ஆன்மாவை இறைவனுடன் சேர்ப்பதற்கென்றே அவன் குருவை பூமிக்கு அனுப்பியுள்ளான். இந்த நிகழ்வு யுகம் யுகமாக நிகழ்ந்து கொண்டு தான் இருக்கிறது. குரு இல்லையேல் எந்த ஓர் ஆன்மாவும் இறைவனடி சேர இயலாது. இறை அனுபூதி பெற்ற குருவாக இருந்தால் மட்டும் தான் ஆத்மாக்களை இறைவனடி சேர்க்க முடியும். இன்றைய உலகத்தில் ஏராளமான குருமார்கள் உள்ளனர். யாரால் நம் ஆன்மாவை கரை சேர்க்க இயலும் என்பதை நம் வாழ்வில் ஒரு காலக்கட்டத்தில் இறைவனே நமக்கு உணர்த்துவான். நம் குரு யார் என்று நமக்குத் தெரிந்த பின்னர் நாம் அவரை குருவாக ஏற்று, அவரிடத்தில் சரணடைந்து, அவருடைய போதனைகளை "கீழ்படிதலுடன் அல்லது பணிவுடன்" பின்பற்றி வாழவேண்டும். ஒரு குருவானவர் எப்படியிருப்பார் என்பதற்கும் ஒரு சீடன் எப்படியிருக்க வேண்டும் என்பதற்கும் கீழ்கண்ட நிகழ்வு ஓர் எடுத்துக்காட்டாகும்.

பரமஹம்ஸர் கூறுகிறார்:

"குருவானவர் ஸ்தூல உருவிலிருந்தாலும் சரி அல்லது சூட்சும அல்லது காரணவெளியிலோ அல்லது அதையும் கடந்த பரம்பொருளிலோ வாழ்வதற்காக இவ்வுலகத்திலிருந்து மறைந்து விட்டிருந்தாலும் சரி அவர் தன்னுடன் ஒன்றி சைந்திருக்கும் சீடனின் அருகில் என்றும் இருக்கிறார். இந்த ஒன்றிசைவே முக்திக்கு வழி காட்டுகிறது. இறைவனிடம் தான் ஒன்றாகியிருக்கும் தன்மையினால் ஓர் உண்மையான குரு சர்வ வல்லமையுடையவர். அவர், தன் சீடன் இறைவனை உணர்ந்திட வானுலகிலிருந்து கீழிறங்கி சீடனுக்கு உதவி செய்ய முடியும். இந்த ஆன்மீக உதவி குருவினுடைய தெய்வீக மற்றும் சாச்வத வாக்குறுதியாகும். ஓர் உண்மையான குருவை கிடைக்கப்பெற்ற சீடன் பெரும்பாக்கியசாலி ஆவான். அவன் குருவினிடத்தில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டும் அவருக்குக் கீழ் படிந்தும் சிரத்தையுடன் பூரணத்துவம் எய்த முயல்வானானால் அவனுடைய நற்பாக்கியம் இன்னும் மகத்தானதாகும். குருசிஷ்ய உறவு சாச்வதமானது. இறைவன் எங்கும் நிறைந்தவன். அதுபோன்று குருவும் எங்கும் நிறைந்தவர். அவருடைய உதவி, அவருடைய வழிகாட்டுதல், அவருடைய போதனைகள் இவ்வுலக குறுகிய காலத்திற்கு மட்டுமல்லாமல் எக்காலத்திற்கும் நீடித்திருக்கும்."

அவர் தொடர்கிறார்: "என் வாழ்நாளில் பல உண்மையான சாதகர்கள் வந்துள்ளனர். அவர் களை நான் கடந்த பிறவியிலிருந்து அறிந்து கொள்வேன். மேலும் இன்னும் அநேகர் வர இருக்கின்றனர். அவர்களை நான் அறிவேன். நான் இந்த உடலை நீத்தபிறகு அவர்கள் வருவார்கள். எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் எண்ணும் ஒவ்வொரு எண்ணத்தையும் ஒவ்வொரு செயலையும் நான் என் உடலை நீத்த பிறகும் அறிவேன்."

## பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

பாகம் 5

பரமஹம்ஸரின் சிஷ்யை மிருணாளினி மாதாஜி கூறுகிறார்: ஒரு புதிய சீடன். குருவானவர் தெய்வீகத்தன்மை உடையவர். ஆதலால், தான் அவரை முன்மாதிரியாகக் கொள்ள முடியாது என வாதிடலாம். ஒரு முறை பரமஹம்ஸர் அம்மாதிரியான ஒரு சீடனிடம் அவனுடைய சக்திக்கு அப்பாற்பட்டது என்று அவன் நினைத்த ஒரு செயலைச் செய்யுமாறு கூறியபொழுது தன்னால் அதைச் செய்ய முடியாது என அவன் மறுப்பு தெரிவித்தான். அதற்கு பரமஹம்ஸருடைய பதில் விரைவாகவும் அழுத்தமாகவும் இருந்தது. "என்னால் அதைச் செய்ய முடியும்". அதற்கு சீடன், "ஆனால் குருதேவா, நீங்கள் யோகானந்தர், நீங்கள் இறைவனுடன் ஒன்றியிருக்கிறீர்கள்" என்று பதில் கூறினார். "ஆமாம், நீ கூறுவது சரி. உனக்குத் தேவையான காலத்தை எடுத்துக்கொள், முடிவில் நீ வெற்றி பெறுவாய்" என்று பரமஹம்ஸர் கூறுவார் என்று சீடன் எதிர்பார்த்தான். ஆனால் குருதேவர் பதிலளித்தார். "உனக்கும் யோகானந்தாவுக்குமிடையே ஒரே ஒரு வித்தியாசம்தான் உள்ளது. நான் முயற்சி செய்தேன். இப்பொழுது நீ முயற்சி செய்ய வேண்டும்". பரமஹம்ஸர், தான் பயிற்சி அளித்த சீடர்களிடமிருந்து இரு பதங்களை ஒருபொழுதும் ஒப்புக்கொள்ளமாட்டார். "என்னால் முடியாது" மற்றும் "நான் செய்யமாட்டேன்". ஒருவர் முயற்சி செய்ய விருப்பத்துடன் இருக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்துவார்."

மேலும் அவர் கூறுகிறார்: "ஒருவன் தன் குருவை அடைந்தவுடன் அவர்மீது நிபந்தனையற்ற பக்தி கொள்ள வேண்டும். ஏனெனில் குருவானவர் இறைவனின் வாகனமாவார். சீடனை ஆன்ம அனுபூதிக்கு அழைத்து செல்வதுதான் குருவின் ஒரே நோக்கமாகும். ஒரு சீடனிடமிருந்து குரு பெறும் அன்பானது குருவின் மூலமாக இறைவனுக்கு அர்ப்பணிக்கப்படுகிறது. குரு இல்லாமல் ஒரு சராசரி பக்தன் இறைவனைக் காணமுடியாது. அதற்கு தேவையானவை 25% தியான உத்திகளை ஈடுபாட்டுடன் சீடன் செய்யும் பயிற்சி, 25% குருவின் அருளாசிகள், மேலும் 50% இறைவனின் அனுக்கிரகம். உங்களுடைய முயற்சிகளில் இறுதிவரை உறுதியாக இருந்தால் இறைவன் உங்கள் முன்னால் தோன்றுவான்."

### குருவிடத்தில் கீழ்படிதல்

ஒரு குருவிடத்தில் சீடன் கீழ்படிதலுடனிருக்க வேண்டும். பணிவு என்பது இறை அனுபூதி பெறுவதற்கு ஒரு முக்கியமான வழியாகும். பெரிய மகான்கள்கூட தன் குருமார்களிடத்தில் பணிவுடன் இருப்பார். அதற்கு ஓர் உதாரணம்: "கும்பமேளாவில் மகா வதார பாபாஜி ஒரு சாதாரண சாது வின் கால்களை கழுவிக் கொண்டிருப்பதை லாஹிரி மகாசயர் காண நேர்ந்தது. அவர் வியப்புற்றார். "குருஜி" அவர் கூறினார். "தாங்கள் இங்கு என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?" "நான் இந்த துறவியின் பாதங்களை கழுவிக்கொண்டிருக்கிறேன்" என்று பாபாஜி பதிலளித்தார். "பிறகு அவர் சமையல் பாத்திரங்களை தேய்க்கப் போகிறேன். குணநலன்களில் மிக உயர்ந்ததான 'பணிவு' இறைவனுக்கு பிரியமானது. அந்தப் பண்பை நான் கற்றுக்கொள்கிறேன்" என்றும் கூறினார்.

அகங்காரத்தை வழிபடுபவர்கள் எதற் கும் பணியமாட்டார்கள். மிக உயர்ந்த நிலையிலி ருப்பவர்களும் உயர்ந்த நிலைக்குச் செல்ல உள்ளவர்களும்மட்டும்தான் 'பணிவை' வழிபடுவர். அவ்வளவு பெரிய மகான் ஆன மகாவாதார பாபாஜியின் செயல் மிக மேன்மையானதும் இறை வனுக்குப் பிரியமான 'பணிவு' என்ற குணத்தை அவர் பிறருக்கு எடுத்துக் காட்டியிருப்பதை நினைக்கையில் நாமெல்லாம் ஏன் அவ்வாறான நிலைக்கு வரக்கூடாது என்று அவருடைய செயல்கள் நினைக்க வைக்கிறது; அதே சமயம் வியப்படையவும் செய்ய வைக்கிறது. ஒரு மனிதன் இப்படித்தான் வாழவேண்டும்

www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com





ஆன்மிகமலர் மெயில் புக்

என்ற உன்னதமான பாடத்தை நமக்கு பாபாஜி கற்றுத்தந்திருக்கிறார். நம் குருதேவர் மற்றும் பாபாஜி வம்சபரம்பரையில் வந்த குருமார்கள் கூறுவதை கீழ்படிதலுடன் பின்பற்றுவதே நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

பரமஹம்ஸர் கூறுகிறார்: "எனக்கே சொந்தமானவரிடம் நான் ஒருமுனைப்பட்ட விசுவாசத்துடன் இருப்பதைப் பாருங்கள். அனைத்து உண்மையான மதங்களும் இறைவனிடம் அழைத்துச் செல்கின்றன. உங்களுடைய உள்ளங்களை ஈர்த்து முழுவதுமாக திருப்தியுறச் செய்யும் ஆன்மீக போதனையை நீங்கள் காணும்வரை தேடுங்கள்; அதைக் கண்டபின்னர் உங்கள் விசுவாசத்தை எதுவும் தொடவிடாதீர்கள். அந்த மார்க்கத்தில் உங்களுடைய முழு கவனத்தையும் செலுத்துங்கள். அதன்மீது உங்கள் முழு உணர்வையும் வையுங்கள். அப்பொழுது நீங்கள் தேடும் பலன்களைக் காண்பீர்கள்,"

விசுவாசத்தைப் பற்றிய ஓர் உதாரணத்தை அவர் கூறுகிறார்: "உங்களுக்கு ஒரு நோய் இருந்தால், நீங்கள் மருத்துவரிடம் செல்வீர்கள். அவர் நோயை குணமாக்கும் மருந்தினை உங்களுக்குக் கொடுப்பார். நீங்கள் அதை வீட்டிற்குக் கொண்டு சென்று, டாக்டரின் அறிவுரைகளின்படி அதைப் பயன்படுத்துவீர்கள். உங்களுடைய ஸ்நேகிதர்கள் உங்களைக் காண வரும்பொழுது உங்களுடைய நோயின் தன்மையை அறிந்து ஒவ்வொருவரும் இவ்வாறு கூற முற்படுவர். "ஓ எனக்கு அந்த நோயைப்பற்றி எல்லாம் தெரியும்! நீங்கள் இந்தஇந்த மாதிரியான மருந்தை அவசியம் உட்கொள்ளவேண்டும்". பத்துபேர் பத்துவிதமான மருந்துகளை உங்களுக்குக் கூறி அவை அனைத்தையும் நீங்கள் பயன்படுத்த முயற்சித்தால் நீங்கள் குணமடைவதற்கான வாய்ப்புகள் கிடைப்பது சந்தேகம்தான். இதே தத்துவம்தான் குருவின் அறிவுரைக்குக் காட்டும் விசுவாசத்தின் முக்கியத்துவத்திற்கு அடிப்படையாக உள்ளது. ஆன்மீக பரிகாரங்களை கலக்க வேண்டாம்."

மேலும் அவர் கூறுகிறார்: "உண்மையான சீடன் தன் குருவிற்கு அனைத்து விஷயங்களிலும் ஆட்சேபனையின்றி கீழ்படிகிறான். ஏனெனில் குருவானவர் ஞானியும் பரிசுத்தவானும் ஆவார். இறைவனுடைய சித்தத்துடன் ஒன்றிணைத்திருக்கும் ஒரு குருவின் ஞானத்தால் வழிநடத்திச் செல்லப்படுவதற்கு நமது சித்தத்தை நாம் அனுமதித்தால் தெய்வீகப்பாதையில் நாம் வேகமாக முன்னேற அந்த குருவானவர் நமது சித்தத்திற்கு வழிகாட்ட முற்படுவார். இறை அனுபூதியின்றி உங்களுக்கு சுதந்திரம் இல்லை. என்னுடன் ஒன்றிசைந்து இருப்பவர்களிடம் இறை அன்பு என்னும் விதையை நடுவது எனக்கு சுலபம். என்னுடைய விருப்பங்களுக்கு கீழ்படிபவர்கள் உண்மையில் எனக்கு அல்ல, என்னுள் உறையும் எம்பெருமானுக்குக் கீழ்படிகிறார்கள். இறைவன் மனிதனுடன் நேரடியாகப் பேசவில்லை. ஆனால் குரு மற்றும் அவருடைய போதனைகளின் மார்க்கத்தை உபயோகிக்கிறான்."

குருவிற்குக் கீழ்படியும் சீடனை இறைவனிடம் சேர்ப்பது குருவிற்கு மிகவும் எளிது. இரும்பை நெருப்பிலிட்டு பழுக்கவைத்தால் மட்டும்தான் அந்த இரும்பை எப்படி வேண்டுமானாலும் வளைக்க முடியும். இறைவன்தான் குரு; குருதான் இறைவன் . ஒரு சீடன் தன்னை குருவிடத்தில் அல்லது இறைவனிடத்தில் 'அர்ப்பணித்தல்' என்பது சரணடைதலைக் குறிக்கிறது. மாயையை கடப்பதற்கும் உயர்ந்த ஞானத்தை அடைவதற்கும் கீழ்படிதல் மிகவும் அவசியம். அகங்காரத்தில் திளைக்கின்ற மனதை அடக்குவதற்கு மனத்தூய்மை வேண்டும். இறை அனுபூதி பெறுவதற்கான முக்கியமானதும் முதலானதுமான வழி மனத்தூய்மையாகும். மனம் தூய்மை அடைந்தால் கீழ்படிதல் தானாகவே வந்துவிடும்.

எல்லா துன்பங்களுக்கும் காரணம் மனம்தான். மனம் நினைத்த மாத்திரத்தில் எங்கே வேண்டுமானாலும் செல்லும்; எதை வேண்டுமானலும் செய்யத்தூண்டும். நல்லதை மட்டும் நினைப்பதற்கும் அதை செயல்படுத்துவதற்கும் மனதிற்குப் பயிற்சி அளிக்கவேண்டும். அதைவிட மனம் மேம்படவேண்டுமென்றால் ஒழுக்கத்தைக் கடைபிடித்து இறைவனைப்பற்றிய விஷயங்களில் மனதை ஒருமுகப்படுத்தப்படவேண்டும். அவ்விஷயங்களில் எப்பொழுதும் ஈடுபாடு வந்தால் தினமும் செய்யவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து, அதில் கவனம் செலுத்தி, அப்பணிகளை சரியாகவும் முறையாகவும் செய்யும்பொழுது படிப்படியாக மனம் செம்மையாகத்தொடங்குவதை நாம் உணரமுடியும். அதற்கான கதை ஒன்று கீழ்க்கண்டவாறு உள்ளது.

ஓர் ஆசிரமத்தில் ஒரு குருவும் அவருக்குப் பல சீடர்களும் இருந்தனர். குருவானவர் தினமும் பகவத்கீதை படிப்பது வழக்கம். அதை கவனித்த ஒரு சீடன் குருவிடம், "குருதேவா, தாங்கள் தினமும் பகவத்கீதை எதற்காகப் படிக்கிறீர்கள்?" என்று கேட்டான். "பகவத்கீதை படிப்பதால் மனம் தூய்மையாகும்" என்று குரு பதிலளித்தார். சீடன், "பகவத்கீதை படித்தால் எப்படி மனம் தூய்மையாகும்?" என்று கேட்டான். "நீங்கள் கூறுவது எனக்கு ஒன்றும் புரியவில்லை குருதேவா! நான் இந்த ஆசிரமத்தை விட்டுச்செல்கிறேன்." என்று அவன் சொன்னான். "நான் ஒரு வேலை தருகிறேன், அதை செய்து முடித்தபின்னர் நீ எங்கே வேண்டுமானாலும் செல்" என்று குரு அவனிடம் கூறினார். சீடனும் அதற்கு ஒப்புக்கொண்டான். "என்ன வேலை நான் செய்யவேண்டும்" என்று சீடன் குருவிடம் கேட்டதற்கு "குருவானவர், கரிபிடித்த ஒரு மூங்கில் கூடையை காட்டி, அதை எடுத்து ஆற்றிற்குச்சென்று தண்ணீர் எடுத்து ஆசிரமத்திலிருக்கும் பெரிய பாத்திரத்தில் ஊற்றி அப்பாத்திரத்தை தண்ணீரால் நிரப்புவாய்" என்று கூறினார். அவன் அந்தக் கூடையை எடுத்தான். அது கரியாக இருந்தது. அவன் ஆற்றிற்குச்சென்று தண்ணீர் எடுத்துவந்தான். அவன் ஆசிரமத்திற்கு வந்துசேருவதற்குள் தண்ணீர் முழுவதும் கூடையின் ஓட்டை வழியாக ஒழுகிப்போய்விட்டது. இரண்டாவது முறையும் அவன் ஆற்றிற்குச் சென்று தண்ணீர் எடுத்து வந்தான். அவன் ஆசிரமத்திற்கு வந்து சேருவதற்குள் தண்ணீர் முழுவதும் ஒழுகிப்போய்விட்டது. இவ்வாறு பலமுறை செய்தான். எத்தனைமுறை செய்தாலும் முன்போன்று தண்ணீர் கூடையின் ஓட்டை வழியாக ஒழுகிக்கொண்டே இருந்தது. தண்ணீர் சேமிக்கமுடியவில்லை.

சீடன் குருவிடம் சென்று நடந்த விஷயத்தைக் கூறினான் "நாளைக்கும் அவ்வாறே செய்" என்றார் குரு. அவன் குரு கூறியவாறு செய்தான். முதல்நாள் நிகழ்ந்ததே அன்றைக்கும் நிகழ்ந்தது. அது போன்று பல நாட்கள் செய்த பின்பும் தண்ணீர் நிரப்ப முடியாததால் மீண்டும் குருவிடம் சென்று நடந்ததைக் கூறினான். "கூடையை இங்கே எடுத்து வா" என்று குரு கூறினார். உடனே சீடன் கூடையை எடுத்துவந்தான். "கூடை முதலில் எப்படியிருந்தது?" என்று குரு சீடனிடம் கேட்டார். "கூடை கரியாக இருந்தது." என்றான். "இப்பொழுது எப்படியிருக்கிறது?" என்று குரு கேட்டார். சீடன், "இப்பொழுது கூடையில் பிடித்திருந்த கரியெல்லாம் போய்விட்டது, கூடை வெளுத்து சுத்தமாக உள்ளது" என்று பதில் கூறினான். அப்பொழுது குரு, "கரியாக இருந்த கூடை தண்ணீரால் எவ்வாறு கழுவப்பட்டதோ அவ்வாறே மனிதனுடைய மனமும் பகவத்கீதை போன்ற நல்ல நூல்களை படிக்கும்பொழுது இறைவனை அடைவதற்கான நல்ல விஷயங்கள் தெரியவரும். இறைவனை அடைவதற்கு மனம் தூய்மையாக வேண்டும். மனம் தூய்மையானால் இறைவனுடனுள்ள தொடர்பு அதிகமாகும். இறைவனின் சகவாசம் அதிகரித்தால் மட்டும்தான் நம் பிறப்பின் முக்கியத்துவத்தை அறியமுடியும். முக்கியத்துவம் என்னவெனில் 'இறைவனுடன் இணைவதே நம் குறிக்கோளாகும்' என்று குரு சீடனிடம் கூறினார். உடனே அந்தச் சீடன் "ஆம், எனக்கு இப்பொழுது எல்லாம் புரிந்துவிட்டது. இனி நான் இந்த ஆசிரமத்தை விட்டு எங்கேயும் செல்லமாட்டேன்" என்று கூறிக்கொண்டு அங்கேயே தங்கினான்.




மனம் தூய்மை அடைந்தால் மட்டும்தான் குருவிற்குக் கீழ்படிந்து குருமூலம் இறைவனை அடைய முடியும். குருவிற்கு கீழ்படிகின்ற சீடன் இறைவனை அடைவான் என்பது உறுதி.

பிரார்த்தனை

"ஓ, தெய்வீக ஆசானே, எனது அறியாமை இருள்
எத்துணை பழமையானதாக இருப்பினும் உனது
பேரொளியின் விடியலுடன், இருளானது என்றுமே
இல்லாதிருந்ததைப்போல் மறைந்து விடும் என்பதை
நான் உணர்வேனாக''!

மீண்டும் மலரும்

குருப்ரியா செல்.நெ: 9894595909

# ஆன்மீக பயிற்சியில் ஆளுமை குறைபாடுகளால் உண்டாகும் எதிர்மறை விளைவுகள்

பண்டைய நூல்களில் ஒரு பழமொழி உள்ளது.

மனமே மனிதனின் பிறப்பு இறப்பு சுழற்சியின் பிணைப்புக்கோ அல்லது விடுதலைக்கோ காரணமாகிறது.

ஒரு மனிதனின் ஆளுமை குறைபாடுகளே அவனது மகிழ்ச்சியின்மைக்கு காரணமாக அமைகிறது. அதே சமயம், அவனது நற்குணங்கள் மகிழ்ச்சி மற்றும் திருப்தியை ஏற்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கின்றது. ஒரு தனி மனிதனின், குறிப்பாக சமூகத்தில் நல்ல செல்வாக்கு உடையவர்களின் குணங்களும் குறைகளும் சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். சமூக வலைதளமும், இணையத்தின் செயல்பாடும் பெருகி வரும் இன்றைய காலகட்டத்தில், தனி மனிதனின் ஆளுமை குறைபாடுகள், உலகம் முழுவதும் வியக்கத்தக்க அளவில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது. ஒருவரின் ஆளுமை குறைபாடுகள், பொதுவாக வேறொரு தனி நபரின் அல்லது மற்றவர்களின் மகிழ்ச்சியின்மைக்கு காரணமாக அமைகிறது. கூடவே வாழ்கை குறித்த ஒருவரின் அணுகுமுறைக்கு பெரும் திறை போன்று உள்ளது. அது மட்டும் அல்லாமல், மகிழ்ச்சியின்மையை தவிர ஆன்மீக பின்விளைவுகளையும் ஏற்படுத்துகிறது.

ஆன்மீக பயிற்சியை மேற்கொள்ளும் சாதகரின் ஆளுமை குறைபாடுகள் காரணமாக ஏற்படும் விளைவுகள்:



## கவனமின்மை:

SSRF (ஆன்மீக வலைத்தளம்), குருக்ருபா யோகத்தை, அதாவது 8 படிகள் கொண்ட ஆன்மீக பயிற்சியை பரிந்துரைக்கின்றது.

கடவுளின் பெயரை ஜபிப்பது இந்த ஆன்மீக பாதையில் அடித்தளமாக உள்ளது என்றாலும், ஆளுமை குறைபாடுகள் மற்றும் அகங்காரம் (ஈகோ) போன்றவை ஏற்கனவே ஆழ் மனதில் நிரம்பியிருப்பதால், அதில் நாமஜபத்தை ஒரு மையமாக (பக்தி மையமாக) உருவாக்க கடினமாக உள்ளது,









பல்வேறு ஆளுமை குறைபாடுகள் காரணமாக ஒரு சாதகரால் நாமஜபத்தை ஜபிப்பதில் கவனம் செலுத்த முடிவதில்லை. உண்மையில், ஆளுமை குறைபாடுகள் காரணமாக, ஒரு நபர், எந்த வகை ஆன்மீக பயிற்சியை மேற்கொள்பவராக இருப்பினும் அதில் கவனம் செலுத்துவதென்பது கடினமானதாகிறது

## கடவுளிடம் ஒன்றற இணைவதற்கு முடிவதில்லை:

ஆன்மீக பயிற்சியின் இறுதி நோக்கம் கடவுளிடம் ஒன்றாக இணைவது. எனினும், எப்படி ஒரு துளி எண்ணெய் இயல்பாகவே தண்ணீரில் ஒன்றாக கலந்து விட முடியாதோ, அதுபோல தான், பல ஆளுமை குறைபாடுகள் கொண்ட ஒரு நபர், குறை ஒன்றும் இல்லாத சர்வ கல்யாண குணங்களின் இருப்பிடமான இறைவனிடம் ஒன்றாக இணைவது என்பது சாத்தியமற்றதாகின்றது.



சனாதன் சன்ஸ்தாவை ஸ்தாபித்த
பரம் பூஜ்ய டாக்டர் ஆடவலே

## ஆன்மீக பயிற்சியில் திருப்தியின்மை:

பல ஆளுமை குறைபாடுகளும் அதிக அகங்காரமும் கொண்ட ஒரு சாதகர் அவரது ஆன்மீக பயிற்சியில் திருப்தி பெற முடியாது, ஏனென்றால், எதிர்மறை குணம் எப்போதும் அவர் வழியில் குறுக்கிட்டு கொண்டே இருக்கும்.

## தீய சக்திகளின் கட்டுப்பாடு:

ஆன்மீக பரிமாணத்தில், இத்தகைய ஆளுமை குறைபாடுகள் மற்றும் அகங்காரம் கொண்ட சாதகரை, மிக எளிதாக தீய சக்திகள் பயன்படுத்தி கொண்டு அவரை கட்டுப்படுத்துவதும் பெரும் தவிப்பிற்கு உள்ளாக்குவதும் நேரிடும்.

## ஆன்மீக பயிற்சி செய்யும் ஆற்றல் குறைதல்:

தனது பல்வேறு ஆளுமை குறைபாடுகள் மற்றும் அகங்காரம் காரணமாக தவறுகள் புரியும் சாதகருக்கு, அவர்தம் ஆன்மீக பயிற்சி மூலம் பெறப்பட்ட சக்தி வெகுவாக குறைவதோடு மட்டுமல்லாது,அவரது செயல் திறன் மற்றும் ஆக்க திறனும்

### குருக்ருபாயோகத்தின் படி ஆன்மீக பயிற்சியில் 8 படிகள் பின்வருமாறு:

1. ஆளுமை குறைபாடு நீக்கம்
2. **சத்சேவை:** சத்தியத்திற்கு (இறைவனுக்கு) சேவை
3. **நாமஜபம்:** கடவுள் பெயரை ஜபிப்பது
4. **சத்சங்கம்:** உறுதியான, இறுதியான உண் மையாக திகழும் இறைவனை அடைய விருப்பம் உள்ளவர்களின் சகவாசம்
5. **தியாகம்:** கடவுளை அடைவதற்கு செய்யும் தியாகம்
6. **ப்ரீதி:** அனைவரிடத்திலும், அனைத்திலும் செலுத் தப்படும் எதிர்பார்ப்பில்லாத ஆன்மீக அன்பு
7. **ஆன்மீக விழிப்புணர்வு:** இறைவன் மீது ஆழ்ந்த பக்தியுணர்வை விழிப்படைய செய்தல்
8. **அகங்காரத்தை அகற்றுதல்**

இது நாள் வரை, 8 படிகள் கொண்ட ஆன்மீக பயிற்சியின் ஆரம்பத்தில் ‘நாமஜபம்’, ‘சத்சங்கம்’ மற்றும் ‘சத்சேவை’க்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

தீர்ந்து விடுகிறது.

## ஆன்மீக பயிற்சியில் ஆளுமை குறைபாடுகள் அகற்றுதலுக்கு முன்னுரிமை:

இவ்விதமான பல ஆளுமை குறைபாடுகள் காரணமாக சாதகர்கள் ஆன்மீக முன்னேற்ற மடையாமல் பிறப்பு மற்றும் இறப்பு சுழற்சியில் மாட்டிக் கொள்கிறார்கள்.

இந்த காரணத்தினால் சனாதன சன்ஸ்தாவை ஸ்தாபித்த பரம் பூஜ்ய டாக்டர் ஆடவலே அவர்கள் பின்வரும் வழிகாட்டுதலை வழங்குகிறார்.

'ஆன்மீகத்தில் முன்னேறும் பொருட்டு, கர்ம யோகம், பக்தியோகம், ஞானயோகம், ஹடயோகம், குண்டலினியோகம் முதலிய பல்வேறு ஆன்மீக பாதைகளில் எந்த பாதையை பின்பற்றி ஆன்மீக சாதனை செய்பவராக இருப்பினும் ஒரு சாதகர் தனது பல்வேறு ஆளுமை குறைபாடுகள் மற்றும் அகங்காரம் போன்றவற்றைக் களைய வேண்டும்.

சத்ய யுகம், திரேதா யுகம், துவாபர யுகம் ஆகிய முந்தைய கால மக்களுடன், கலியுகத்தில் உள்ள மக்களை ஒப்பிடுகையில் முந்தைய யுக மக்களுக்கு ஆளுமை குறைபாடுகள் மற்றும் அகங்காரம் மிக குறைந்த அளவே இருந்தது. கலியுகத்தில் பெரும்பாலான மக்கள் ஆளுமை குறைபாடுகள் மற்றும் அகங்காரதின் காரணத்தால் ஆன்மீக முன்னேற்றம் அடைய முடிவதில்லை.

எனவே, ஒரு சாதகர், ஆன்மீக பயிற்சியில் எந்த பாதையை பின்பற்றினாலும் அவரது ஆளுமை குறைபாடுகள் மற்றும் அகங்காரத்தை அகற்ற முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.'

(பராத்பர குரு டாக்டர் ஜெயந்த் ஆடவலே)

எனினும், சாதகர்கள், தற்போதைய காலகட்டத் திற்கு ஏற்றவாறு அவரவர் ஆளுமை குறைபாடுகள் மற்றும் அகங்காரத்தை அகற்றுதலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதை உணர்ந்து, பின்வரும் வரிசையில் அதாவது 'ஆளுமை குறைபாடுகளை அகற்றுதல்', 'சத்சேவை', 'நாமஜெபம்', 'சத்சங்கம், 'தியாகம்', 'ப்ரீதி, 'ஆன்மீக உணர்வு விழிப்படைய செய்தல்' மற்றும் 'அகங்காரத்தை அகற்றுதல்', என்ற வரிசையில் ஆன்மீக பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்,

ஒரு சாதகர் 'ஆளுமை குறைபாடு நீக்குதல்' மற்றும் 'அகங்காரத்தை அகற்றுதல்' ஆகியவற்றை மற்ற ஆன்மீக பயிற்சியுடன் சேர்த்து உண்மையாக ஈடுபடும்போது, அவருக்கு விரைவான ஆன்மீக வளர்ச்சி உறுதியாகும்.

மேலும் தகவல்களுக்கு:
www.ssrf.org, 9380949626




## தவறை சுட்டிக்காட்டிய அன்பர்களுக்கு நன்றி

சென்ற இதழில் வெளியான பக்கம் 36ல் உள்ள கீதை உபதேசங்கள் என்ற பக்கத்தின் தலைப்பில் பிழை ஏற்பட்டுள்ளது.

உண்மையில் அந்த தலைப்பு......

**"மனிதனுக்கும் மனித உடலுக்கும் ஏற்ற ஆன்மீக உபதேசங்கள்"**

என்று வருவதற்கு பதிலாக

**"கீதை உபதேசங்கள்"**

என்று தவறுதலாக வந்ததை பல அன்பர்கள் மற்றும் ஆன்மீக குரு ஒருவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே அன்பர்கள் தயவு செய்து மேற்குறிப்பிட்ட தவறை திருத்திப் படிக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

தவறை சுட்டிக் காட்டிய அனைத்து அன்பர்களுக்கும், ஆன்மிக குருவிற்கும் சிரம் தாழ்ந்த வணக்கங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

# வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

**உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.**

**உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை**

**(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)**

**எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்**

தொடர்பு கொள்ளவும்:
**ஆசிரியர்: நாகராஜன்**
16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்
பொன்மணிமாளிகை அருகில்,
சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி 7299992699/ 8939499598

www.aanmeegamalar.com

# குரு என்பவர் யார்?

பல பல புது விதமான கலைகளுடன் ஆன்மீகத்தையும் ஞானத்தையும் தருவதாகச் சொல்லி வியாபாரம் நடத்தும் நிறுவனங்கள் இன்று பெருகி விட்டதை நீங்கள் காணலாம். யோகா மையங்கள் என்ற பெயரில் விற்பனை மையங்கள் பெருகிவிட்டது. செய்திதாளில் நான் படித்த ஒன்று, “கேள்வி: காற்றில் ஆடும் மணியை அறையின் நடுவே ஏன் தொங்க விட வேண்டும். ஏன் கதவையோ சுவரையோ ஒட்டி தொங்க விடக் கூடாது.?”.

இந்த கேள்விக்குள் எந்த பெரிய அர்த்தமும் இல்லை. ஆனால் இதற்கு புது புது சிந்தனைகளுடன் பதில் கூற முடியும். ஆனால் பதில் கேட்பதற்கு புது சிந்தனைப் போல் தோன்றினாலும், எத்தனை சதமானம் அதில் உண்மை இருக்கும்?. உண்மையை விட புது சிந்தனைக்கு மக்கள் கொடுக்கும் முக்கியம், வியாபாரிகளுக்கு விளம்பரத்தை எளிமை யாக்கி விடுகிறது.

வியாபார நோக்கத்தில் இருக்கும் ஒரு இடத்தில் இருந்து கொண்டு ஆன்மீக அனுபவத்தைப் பெறுவது எப்படி சாத்தியம்?. மாயா உலகத்தில் இருந்துக் கொண்டு பணம் கொடுத்து யோகாவை உங்களால் வாங்க முடியும் என்றால், யோசித்துப் பாருங்கள் நீங்கள் உண்மையில் யோகா நெறியை கடைப்பிடிக்கிறீர்களா என்று.

யோகா என்றால் என்ன என்பதையும், நாம் தேவை என்ன என்பதையும் தெரிந்துக் கொல்லாமல், நாம் யோகவைக் கற்றுக் கொள்ள விரும்புகிறோம். இதனால் பெரும்பாலும் நாம் வியாபாரிகளின் கைகளில் சிக்கிக் கொள்வதுதான் அதிகம். பல வருட பயிற்சிகள் கடந்தும் எந்த அனுபவமும் ஏற்படவில்லை என்றால், எத்தனை நாட்களை வீண் அடித்தீர்கள் என்று நினைத்துப் பாருங்கள்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்த ரிஷிகளை சிந்தித்துப் பாருங்கள். அவர்கள் மிக பிரகாசமானவர்கள் ஆகவும், வாழ்நாள் இறுதி வரை ஆரோக்கியமாகவும் இருந்தார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை, படைப்பை இயக்கும் ஆற்றலை அவர்களால் உள்வாங்க முடிந்தது. என்னால் உறுதியாக கூற முடியும், அவர்கள் இன்று நடப்பது போல் எந்த யோகா வகுப்பும் பணம் கொடுத்து கற்றுக் கொள்ளவில்லை. படைப்பை இயக்கம் ஆற்றல் பல்வேறு விதகமாக நம்மை சுற்றி இருக்கிறது.

யோகிகளால் அதனை உணர முடியும், மேம்பட்ட உணர்வு நிலை அதற்கு வேண்டும். மூலையில் 7 முதல் 8 சதமானமே சாதாரண மனிதர்களுக்கு இயங்குகிறது. ஐந்து புலன்களால் ஏற்படும் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ள மூளையின் இந்த ஆற்றல் போதுமானது. மாயா உலகில் செயல்பட ஐந்து புலன்களும்( ஐந்து உணர்வு) போதுமானது. ஆனால் மேல சொல்லப் பட்ட மிகப் பெரிய ஆற்றலை உணர மூளையின் மேம்பட்ட பகுதி செயல்பட வேண்டும். எப்போது ஒருவர் குருவின் வழிகாட்டுதலின் படி யோகா நெறிக்குள் நுழைகிறாரோ, ஐந்து புலன்களும் தனது அடக்கத்திற்குள் வந்து, நாம் இது வரை உணர்ந்திடாத சக்தி மண்டலத்தை உணர முடியும். சுவசத்தின் மூலம் எல்லா அறிவுகளையும் திறக்க முடியும், அதற்கு மிகவும் ஆழமாக நீண்ட சுவாசம் இருக்க வேண்டும். அதற்கு தான் பிரணாயம பயிற்சிகளில் ஈடுபடுகிறோம். அதை விடுத்தது வேகமாக சுவாசிக்கும் பயிற்சிகளை மேற்கொண்டீர்கள் என்றால் அதை கை விடுங்கள்.

யோகா என்பது குரு இல்லாமல் சாத்தியமா இல்லை. குரு என்பவர் தன்னுடைய சிஷ்யனோடு நேரடி தொடர்பு உடையவர். ஒரு குரு ஒருவனை சிஸ்யனாக ஏற்றுக் கொள்கிறார் என்றால், அவன்/ அவள் மீதான முழு பொறுப்பும் அவருடையது. குரு உங்கல் அருகே இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. ஆனால் குரு சிஸ்யனைக் கவனித்துக் கொண்டே இருப்பார். ஒவ்வொரு கணமும், அவன் மீது அவர் கவனம் இருக்கும்.

பதஞ்சலி யோகா சூத்ராவில் சொல்லிருக்கும் முதல் அங்கம், 5 யமாஸ். சத்ய உண்மையை மட்டும் பேசுவது. அஸ்தய நாட்டிலோ அல்லது மக்களிடத்திலோ எதையும் திருடாமல் இருப்பது. அபாரிகிரக சொத்துக்களையோ அல்லது அரசியல் பலத்தையோ திரட்டாமல் இருப்பது. அஹிம்ச வன்முறை அல்லாதது. பிரம்மச்சரியம் ஒழுக்கம். இந்த ஐந்தில் ஒன்று இல்லை என்றாலும் அவர் குரு என்ற சொல்லுக்கு தகுதி இல்லாதவர். நீங்கள் யாரை குரு என்று அழைக்குறீர்கள் என்பதில் முழு கவனம் வேண்டும்.

யோகி அஷ்வினி

குரு சிஷ்ய பரம்பரை வழியாக யோகா நெறியை கற்றுக் கொள்ள அணுகவும். இந்தியாவில் பல பாகங்களில் தியான் அஷிரமத்தால் யோகா கற்றக் கொடுக்கப்படுகிறது. எந்த கட்டணமும் கிடையாது.
9841430369. www.dhyanfoundation.com











## சாப்பிடும் முன், உணவிருக்கும் இலையை நீரால் சுற்றுகிறார்களே ஏன்?

இறைவன் நம் உயிராக நமக்குள்ளேயே இருக்கிறார். இப்படி ஆன்ம வடிவமாக இருக்கும் இறைவனுக்கு நாம் சாப்பிடுவதை நிவேதனம் செய்யும் முறையாக இது செய்யப்படுகிறது. இதை பரிசேஷனம் என்பர்.

# பல்வேறு பிரச்சனை தீர்க்கும் சுந்தரகாண்டம்

## படித்தால் தீரும் பிரச்சனைளும் பலனும்

இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாச புராணங்கள் அனைத்தும் மனித வாழ்க்கை மேம்படுவதற்காக முன்னோர்களால் இயற்றப்பட்ட ஒரு அற்புதமான படைப்பு, மனிதனாக பிறந்தவர்கள் ஒரு சில இன்ப துன்பங்களை அனுபவித்தே ஆகவேண்டும் என்பது இயற்கை கட்டளை, அதை யாரும் மீற முடியாது. மனிதப் பிறவியே இல்லா நிலை ஏற்பட, மேற்கண்ட இன்ப, துன்பங்கள் நமக்கு பல வழிகளில் உதவும் என்பதால் அவற்றை கண்டிப்பாக மனிதன் அனுபவிக்க வேண்டும் என்பதால் இறைவனின் கட்டளைப்படி இயற்கை மனிதர்கள் மீது தினிப்பதாகவும் கொள்ளலாம்.

மனிதனாக அவதாரம் எடுத்த கடவுள்களே, இன்ப துன்பத்தை அனுபவித்தே தீரவேண்டும் என்பதை மற்றவர்களுக்கு உணர்த்தும் விதமாக உருவாக்கப்பட்டதே இதிகாச புராணங்கள். அந்த வகையில் இராமாயணமும், மகாபாரதத்திலும் ஒருசில பகுதிகள் படித்தால் கடவுள் பட்ட துன்பங்களைவிட மனிதர்களான படும் துன்பங்களின் தீவிரம் மிகச் சாதாரணம் என்று தோன்றும். அவ்வாறு அதை படிக்கும்போது மனிதர்களின் மன பலம் கூடுவதுடன், புத்துணர்ச்சியும் ஏற்படம் அதனால் ஒரு சில புராணங்களின் ஒரு சில பகுதிகளை படித்தால் ஒரு சில நன்மைகள் ஏற்படும் என்று கூறுகின்றனர் நமது முன்னோர்கள். அந்த வகையில் சுந்தரகாண்டத்தை நாம் படிப்பதால் ஏற்படும் நன்மைகளைப் பார்ப்போம்.

1. ஒரே நாளில் சுந்தர காண்டம் முழுவதையும் படிப்பதன் பெருமையை ஆயிரம் நாக்குகள் படைத்த ஆதிசேஷனால் கூட விவரிக்க முடியாது என்று கூறப்பட்டு உள்ளது.
2. சுந்தரகாண்டத்தில் உள்ள ஒவ்வொரு சர்க்கமும் மாபெரும் மந்திர சக்திகளுக்கு இணையானது என்று ஆன்மிக பெரியவர்கள் கூறியுள்ளனர்.
3. சுந்தரகாண்டத்தை ஆத்மார்த்தமாக படித்து வந்தால் வாழ்க்கையில் உள்ள துக்கங்கள் முடிவுக்கு வந்து விடும்.
4. சுந்தர காண்டத்தை தொடர்ந்து வாசித்து வந்தால், வாசிக்க, வாசிக்க மன வலிமை உண்டாகும்.
5. சுந்தரகாண்டம் படித்து அனுமனை வழிபட்டு வந்தால் அறிவு, ஆற்றல், புகழ், குறிக்கோளை எட்டும் திறமை, துணிச்சல், ஆரோக்கியம், விழிப்புணர்வு, வாக்கு சாதூரியம் போன்றவற்றைப் பெறலாம்.
6. ஆஞ்சநேயருக்கு வடை வெண்ணெய் வைத்து நெய்தீபம் ஏற்றி சுந்தரகாண்டம் படித்து வந்தால் குழந்தை பாக்கியம் உண்டாகும்.
7. ராமனுடன் மறுபடியும் வாழ முடியும் என்ற நம்பிக்கையை சீதைக்கு கொடுத்து சுந்தரகாண்டம்தான். எனவேதான் கருவுற்ற தாய்மார்கள் சுந்தரகாண்டம் படிக்க வேண்டும் என்கிறார்கள்.
8. சுந்தரகாண்டத்தில் அனுமன் கடலைத் தாண்டுவதற்கு முன்பு சொன்ன ஸ்லோகத்துக்கு “ஜெய பஞ்சகம்” என்று பெயர். இதை சொல்லி வந்தால் வீட்டில் செல்வம் பெருகும்.
9. சுந்தரகாண்டத்தில் அனுமன் சீதையை கண்டுபிடிக்க அசோக வனத்துக்கு செல்லும் முன்பு கூறிய ஸ்லோகத்தை கூறி வந்தால் வெற்றி மீது வெற்றி உண்டாகும்.
10. சுந்தரகாண்டம் என்று பெயர் சொல்லுவார். இதை சுகம் தரும் சொர்க்கம் என்பார்கள்.
11. சுந்தர காண்டம் படிப்பதன் மூலம் வேதம் சொல்லிய புண்ணியத்தை பெற முடியும்.
12. சுந்தரகாண்டத்தை ஆத்மார்த்தமாக படித்தால்தான் அதன் முழு பலனும் கிடைக்கும்.
13. சுந்தரகாண்டம் மிகவும் வலிமையானது. அதை வாசிப்பவர்களுக்கும் வலிமை தரக்கூடியது.
14. சுந்தரகாண்டத்தில் காயத்திரி மந்திரத்தின் அளவற்ற சக்தி உள்ளதாக கருதப்படுகிறது.
15. சுந்தரகாண்டத்தை முழுமையாக படித்து முடித்ததும் ஆஞ்சநேயரை வழிபட்டு, ஏழைகளுக்கு உதவி செய்தால் அளவில்லா புண்ணியம் கிடைக்கும்.
16. சுந்தரகாண்டம் புத்தகத்தின் பதினோரு பிரதிகள் வாங்கி பதினோரு பேருக்கு படிக்க கொடுத்தால் யாகம் செய்ததற்கான பலன்கள் கிடைக்கும்.



# வீட்டில் வைத்து வழிபட வேண்டிய தெய்வங்கள்







அவரவர் குல தெய்வத்தின் படத்தினை வைத்து வணங்கி வரலாம். இது மிகவும் நன்மை பயக்கும். குல தெய்வம் நம்மை கண்ணின் இமை போல் காத்து நிற்கும். குல தெய்வத்தினை விட உயர்ந்த தெய்வம் உலகில் இல்லை. குல தெய்வத்தின் அருள் இல்லாமல் நாம் வாழவே இயலாது.

அவரவர் இஷ்ட தெய்வத்தின் படத்தினை வைத்து வணங்கி வரலாம். இதுவும் நன்மை பயக்கும். நமது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி நம்மை காப்பாற்றும் தெய்வம் இஷ்ட தெய்வமே. குல தெய்வத்திற்கு அடுத்த படியாக நமக்கு அருள் பாலிக்கும் தெய்வம் இஷ்ட தெய்வமே.

எந்த ஒரு விநாயகர் படத்தினையும் வைத்து வணங்கி வரலாம். முழு முதற் கடவுள் இவரே. இவரை வழிபடுவதால் நம் வாழ்வில் அனைத்து நலங்களையும் பெறலாம். காரியசித்தி உண்டாக்குபவர் இவரே.விக்கினங்களையும், வினைகளை களைபவரும் இவரே.நல்வழி காட்டுபவரும் இவரே.

குழந்தை கடவுளரின் படம் எதுவாக இருந்தாலும் வைத்து வணங்கி வரலாம். இது குழந்தை வரம் தரும். குழந்தை இல்லாதவர்கள் வழிபாடு செய்ய வேண்டியது மிகவும் அவசியம். நல்ல குழந்தைகள் பிறக்கும். பிறந்த குழந்தைகளின் வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும்.

ராஜ அலங்கார முருகரின் படத்தினை வைத்து வணங்கி வரலாம். அரசாங்க காரியங்களில் வெற்றி பெறவும், அரசு வேலைக்கு முயற்சிப்பவர்களும், அரசியலில் முன்னேற துடிப்பவர்களும் வணங்க வேண்டிய கடவுள் இவரே. இவரின் அருள் இல்லாமல் அரசியலும் இல்லை, அரசாங்கமும் இல்லை.

மணக்கோலத்தில் இருக்கும் முருகரின் படத்தினை வைத்து வணங்கி வரலாம். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணத்தடையை போக்கும் வடிவம் ஆகும்.திருமணம் ஆனவர்களின் வாழ்வில் மகிழ்ச்சியை பொங்க செய்யும் வடிவம் இதுவே ஆகும். இல்லறம் நல்லறமாக நடக்கும்.

அர்த்தநாரீஸ்வரின் படம் வைத்து வணங்கி வரலாம்.நாம் அனைவரும் வணங்க வேண்டிய கடவுள் இவரே.பிரிந்த தம்பதியர் வணங்கி வந்தால் விரைவில் ஒன்று சேருவர். தம்பதியரின் திருமண வாழ்வில் ஒற்றுமை, அன்பு, காதல், பாசம் உண்டாகும். தம்பதியரின் கருத்து வேற்றுமை நீங்கும்.

சக்தியுடன் இருக்கும் சிவபெருமானின் படத்தினை வணங்கி வரலாம்.சிவசக்தி கலப்பே உலகம்.சிவசக்தி கலப்பில்லாமல் உலகில்லை. க்தியுடன் இருக்கும் சிவபெருமானுக்கே மிகவும் வலிமை அதிகம்.எப்போதும் எல்லோருக்கும் எல்லாவற்றையும் வழங்கும் வடிவம் சிவசக்தி வடிவம் ஆகும்.

ராதையுடன் இருக்கும் குழலூதும் கிருஷ்ணரின் படம் வைத்து வணங்கி வரலாம். இது திருமணத்தடையை நீக்கும் வடிவம் ஆகும். இந்த வடிவம் தம்பதியர் இடையே அன்பு, பாசம், காதல், நேசம் இவற்றை உருவாக்கும் வடிவம் ஆகும். தம்பதியரின் கருத்து வேற்றுமையை நீக்கும் வடிவம் ஆகும்.

குடும்பத்துடன் இருக்கும் சிவபெருமானின் படம் வைத்து வணங்கி வரலாம். இதுவே எல்லா வடிவங்களைக் காட்டிலும் மிகவும் சிறந்தது. இதனை வைத்து வணங்கி வர குடும்பத்தில் ஒற்றுமையும், அமைதியும் உண்டாகும். குடும்பம் ஒற்றுமையுடன் செழித்து வளரும்.

தனது மனைவியான சொர்ணதாதேவியை அணைத்தவாறு தன் மடியில் அமர்த்தி அருள்பாலிக்கும் சொர்ணபைரவரின் படமும் வீடுகளில் வைத்து வணங்கத் தக்கதே. பைரவ வடிவங்களிலேயே சிறந்த இவ்வடிவத்தினை வணங்கி வர அறம், பொருள் மற்றும் இன்பம் அனைத்தும் பெருகும்.

ராமர், சீதை, லட்சுமணன் இவர்களுடன் கூடிய அனுமனின் படமும் சிறப்பானதே. பஞ்சமுக அனுமன் கேட்ட வரங்களை எல்லாம் அள்ளித் தருபவர். அனுமனின் படம் வைத்தால் அதனுடன் ராமனின் படத்தையும் கட்டாயம் வைக்க வேண்டும்.

லட்சுமியுடன் கூடிய நாராயணனின் எந்த ஒரு அவதாரத்தையும் தாராளமாக வீட்டில் வைத்து வழிபாடு செய்யலாம். இதனால் திருமகளின் அருள் கிட்டும். நிம்மதியான வாழ்க்கையும் 16 வகை பேறுகளும் கிட்டும்.

சிவகாமசுந்தரியுடன் நடனமாடும் நடராசரை தாராளமாக வீட்டில் வைத்து வழிபாடு செய்யலாம். இது சிவசக்தி அருளைத் தரும். 16 பேறுகளும் கிட்டும். நடனம், இசை முதலான நுண்கலைகளில் புலமை உண்டாகும். கர்ம வினைகள் தொலையும். மாயை விலகும். முக்தி கிட்டும்.

ஞானத்தினை போதிக்கும் தட்சணாமூர்த்தியின் படம் வீட்டில் வைத்து வணங்கி வழிபாடு செய்வது நன்று. இதனால் அறிவும், ஞாபக சக்தியும் உண்டாகும். கல்வி ஞானம் கிட்டும். ஞாபக மறதி உடைய குழந்தைகள் வணங்க வேண்டிய வடிவம் இதுவே. கல்வி, செல்வம், வீரம் மூன்றும் கிட்டும்.

கலைமகளின் படமும் வீட்டில் வைத்து வணங்கத் தக்கதே. இதனால் குழந்தைகள் மட்டுமல்லாமல் பெரியவர்களுக்கும் பேச்சுத்திறமையும், எழுத்துத்திறமையும் உண்டாகும். நமது வளமான வாழ்விற்கு வாணி வழிகாட்டுவாள். போட்டித் தேர்வுகளில் வெற்றி உண்டாகும்.

லட்சுமியின் எந்த ஒரு படமும் வீட்டில் இருக்கலாம். குபேரனுக்கு அருள் பாலிக்கும் லட்சுமி படமும், லட்சுமி மற்றும் குபேரன் இவர்கட்கு அருள் பாலிக்கும் சிவபெருமானின் படமும் மிகவும் சிறந்தவை. இத்தகைய படங்களை வைத்து வணங்கி வர 16 பேறுகளும் கிட்டும். 8 ஐஸ்வர்யங்களும் உண்டாகும்.

அலர்மேல்மங்கைத் தாயாருடன் கூடிய வேங்கடேச பெருமாளின் படம் வீட்டில் வைத்து வணங்கி வரலாம். இதனால் செய்தொழிலில் நல்ல வருமானமும், சுகமான வாழ்க்கையும் அமையும். மேற்கண்ட படத்துடன் லட்சுமியின் படமும் இருப்பது மிகவும் சிறப்பானது.

துர்க்கையின் படம் வீட்டில் வைத்து வழிபாடு செய்வது மிகவும் சிறப்பானது. இதனால் தீமைகள் அழிந்து நன்மைகள் பெருகும். கணவன் மற்றும் மனைவி இடையே ஒற்றுமை உண்டாகும். செய்யும் தொழிலில் மேன்மை உண்டாகும். வியாபாரம் பெருகும்.

அன்னம் பாலிக்கும் அன்னபூரணியின் படம் நாம் அவசியம் வீட்டில் வைத்து வழிபாடு செய்தல் மிகவும் சிறப்பானது. இதன் மூலம் வறுமை அகலும். பசி, பட்டினி, பஞ்சம் தீரும். வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு கண்டிப்பாக வேலை கிடைக்கும்.

சித்தர்கள், மகான்கள், முனிவர்கள், யோகிகள், ரிஷிகள் இவர்களின் படங்களையும் வீட்டில் வைத்து வழிபாடு செய்யலாம். இதனால் குருவருள் வந்து சேரும்.தோஷங்கள் விலகும். கர்மவினைகள் நீங்கி புண்ணியம் சேரும். வளமான, நிம்மதியான வாழ்க்கை கிட்டும்.




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன்
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
♦♦♦
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
♦♦♦
நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
7299992699/8939499598



ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8939499598
7299992699 / 9677159070




# இறைவனுக்கு உடைக்கும் தேங்காய் அழுகியிருந்தால் அபசகுனமா?

மனித மனம் என்பது எந்நேரமும் எல்லா செயலும் நன்மை தருவதாக அமைந்தால் மிகுந்த ஆனந்தம் அடையும், அதைவிடுத்து ஒரு சிறு செயல் எதிர்பார்த்தத போன்று நடைபெறாவிட்டால் மிகுந்த மன உளைச்சல் அடையும். அந்தவகையில் ஒரு சில செயல்கள் செய்யும் போது கை தவறுதல், தடைபடுதல் போன்ற நிகழ்வுகள் ஏற்படும் போது மனம் மிகுந்த சஞ்சலம் அடையும். உதாரணமாக குங்குமம் எடுக்கும்போது தவறினால் மனம் சஞ்சலப்படும்.

அதேபோன்று வெளியில் செல்லும் போது அப சகுணங்கள் நிகழ்ந்தாலும் வருத்தப்படும். இதுபோன்ற பல தேவையற்ற விஷயங்களில் மனித மனம் சிக்குன்டுவிடுகின்றன.

அந்த வகையில் கோவில்களில் உடைக்கப்படும் தேங்காய் ஒருசில நேரம் அழுகிவிடுவதும் உண்டு. ஆனால் அதை மிகப்பெரிய கெடுதல் தரும் விஷயமாக எடுத்துக் கொண்டு கண் கலங்குபவர்களும் உண்டு.

எப்பொழுதும் வீட்டில் நல்ல காரியங்கள் செய்யும் போது பயன்படுத்தும் முக்கியப் பொருள் தேங்காய். ஒரு கண், இரண்டு கண், மூன்று கண் என தேங்காய் மூன்று கண்களை கொண்டுள்ளது. அதில் தேங்காயின் முதல் கண் பிரம்மனாகவும், இரண்டாவது கண் லஷ்மியாகவும், மூன்றாவது கண் சிவனாகவும் போற்றப்படுகிறது.

கடவுளுக்கு நம்முடைய உள்ளத்தின் சுத்தத்தைக் காண்பிக்க தேங்காயில் சில சகுனங்கள் உண்டு.

தேங்காய் உடைக்கும் பொழுது அழுகி இருந்தால் தேவையில்லாத பயம், குழப்பம், கலக்கம், ஏமாற்றம் அடைந்ததாக எண்ணிக்கொள்வார்கள். ஒரு சிலர் நடக்கக்கூடாதது நடந்துவிட்டதை போல தானும் பயந்து மற்றவர்களையும் பயமுறுத்துவார்கள்.

ஆனால் அழுகிய தேங்காய் ஆனந்தத்தின் அறிகுறி...!

அழுகிய அனைத்து தேங்காயும் காரிய சித்தி ஆகுவதற்கான அறிகுறியாகும். ஒரு துணியை எடுத்து நீரில் நனைத்து அழுக்கை துடைத்து பிழிந்தால் அழுக்கு நீர் தான் வரும் அதே போல தான் உங்கள் பீடை, துர்சகுனங்கள், கண்திருஷ்டி ஆகியவை அனைத்தும் பிரார்த்தனை செய்து உடைக்கும் தேங்காயில் விலகியதன் அறிகுறியை காட்டுகிறது.

முழு கொப்பரையாக இருந்தால் சுபகாரியம், புத்திர பாக்யம் உண்டாகும், பிரிந்த குடும்பம் ஒன்று சேரும் என்று பெரியோர்கள் கூறுவார்கள்.

அடுத்து, தேங்காயில் பூ இருந்தால் எதிர்பாராத வரவு மற்றும் லாபம் ஏற்படும். நீங்கள் உங்களையோ அல்லது கடவுளையோ மட்டும் முழுமையாக நம்பினால் போதும் மற்றவை அனைத்தும் நல்லபடியாக நடக்கும்....!




விளம்பர விபரம்
அரை பக்க விளம்பரம்
ரூ.2500
முழு பக்க விளம்பரம்
ரூ.5000
பேக்கேஜ் விளம்பரங்களும் ஏற்றுக் கொள்ளப்படும் விளம்பர ஏஜென்சிகளும் வரவேற்கப்படுகிறார்கள்
கோவில்களில் நடைபெறும், நடைபெற்ற, நிகழ்ச்சிகளை இலவசமாக பிரசுரிக்கிறோம். நிகழ்ச்சி பற்றி முழு தகவலையும் கோவிலின் புகைப்படத்தையும் அனுப்பிவைக்கவும்
விளம்பர தொடர்புக்கு:
8939499598 / 9677159070
aanmeegamalar@gmail.com

உங்களைத்தான் தேடுகிறோம்...
ஆன்மீகமலர்.காம்
இணையதளத்தின் மூலம் வெளிவரும் ஆன்மீகமலர்.காம் மெயில் புத்தகத்தில் நீங்களும் துணை ஆசிரியராக வாய்ப்பளிக்கிறோம்...
உங்கள் ஊரில் உள்ள கோயில், மடம், சித்தர்கள், ஆன்மீக சேவை புரியும் அன்பர்கள், உழவாரப்பணி செய்யும் அன்பர்கள், கோயிலின் சிறப்புகள் போன்றவற்றை தொகுத்து வழங்க விருப்பமிருந்தால் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
எங்களுடன் நீங்களும் இணைந்து ஆன்மீக சேவை புரியலாம்...
தொடர்பு கொள்ளவும்:
7299992699 / 8939499598
aanmeegamalar@gmail.com

# ராகு–கேது–கால சர்ப்ப தோஷ பரிகாரங்கள்

## ராகு கேது தோஷம்

ராகு கேது தோஷம் என்பது என்னவென்றால் ஒருவரது ஜாதக கட்டத்தில் லக்னத்தில் ராகு, 7ஆம் இடத்தில் கேது (அ) லக்னத்தில் கேது, 7ஆம் இடத்தில் ராகு இருந்தால் அது ராகு கேது தோஷமாகும். அதேபோல், 2இல் ராகு, 8இல் கேது (அ) 8இல் ராகு, 2இல் கேது இருந்தால் அது ராகு கேது தோஷமாகும்.

ராகு கேது தோஷத்தால் திருமணத்தில் தடைகள், திருமணம் அமைவதில் தடைகள், திருமண வாழ்க்கையில் சின்னச் சின்ன வாக்குவாதங்கள், கணவன் மனைவி இடையே விட்டுக் கொடுக்க முடியாத ஈகோ பிரச்சனைகள் இவையெல்லாம் உருவாக்கும்.



ராகு கேது பரிகார ஸ்தலங்கள் :

கும்பகோணம் அருகே உள்ள திருநாகேஸ்வரம் ராகு ஸ்தலமாகும்.

நவதிருப்பதிகளில் தொலைவில்லி மங்களம் பரிகார ஸ்தலமாகும்.

சிவ ஸ்தலமான காளஹஸ்தியில் ராகுவுக்கு சிறப்பான வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

கும்பகோணம் அருகே கீழப் பெரும்பள்ளம் கேது ஸ்தலமாகும்.

திருச்சி ஸ்ரீரங்கம் ரங்கநாதர் ஸ்தலம்.

## பரிகாரங்கள் :

கேதுவின் அருள் பெற விநாயகர், சித்ரகுப்தர் ஆகிய தெய்வங்களை வழிபடலாம்.

ராகுவின் அருள் பெற துர்க்கை அம்மன், கருமாரி அம்மன் ஆகிய தெய்வங்களை வழிபடலாம்.

காஞ்சிபுரத்தில் சித்ரகுப்தருக்கு தனி ஆலயம் உள்ளது. அங்கு கேது பரிகார பூஜை செய்யலாம்.

புற்று இருக்கும் அனைத்து அம்மன், காளி கோயில்களிலும் ராகு பரிகார பூஜைகள் செய்யலாம்.

நவகிரகத்தில் உள்ள ராகு கேதுவுக்கும் விளக்கேற்றலாம்.

சிவன் கோயிலில் உள்ள விஷ்ணு துர்க்கையை ஞாயிற்றுக்கிழமை ராகு காலத்தில் வழிபட வேண்டும்.

பெருமாள் கோயிலில் உள்ள விஷ்ணு துர்க்கையை புதன்கிழமை ராகு காலத்திலும் வணங்குவது நல்லது.

சங்கடஹர சதுர்த்தியன்று விநாயகருக்கு அபிஷேக, ஆராதனைகள், அர்ச்சனை செய்து வழிபடவும்.

தேய்பிறை அஷ்டமியில் காலபைரவருக்கு வடைமாலை சாத்தி வழிபாடு செய்யலாம்.



www.aanmeegamalar.com



ஆஞ்சநேயருக்கு வடைமாலை சார்த்தலாம்.

## கால சர்ப்ப தோஷ பரிகாரங்கள்

இரண்டு பாம்புகள் இணைந்திருக்கும் போது அவற்றைக் கொல்ல முயலும்போது ஒன்றை மட்டும் கொன்றால்(மற்றது தப்பித்துவிட்டால்) அது மிகக்கொடூரமான பாவமாகும். இந்தப் பாவம் செய்தவர்கள்தான் மறுபிறவியில் லக்னத்தில் ராகு அல்லது கேது தனித்திருக்கப் பிறக்கின்றனர். அப்படி அடிக்கும்போது அது உங்களை ஒன்றும் செய்ய மாட்டேன் என்னை விட்டுவிடுங்கள் என்பதைப்போல தனது வாலால் மூன்றுமுறை தரையில் அடித்துச் சத்தியம் செய்யும். அப்போது அதை உயிரோடு விட்டு விட்டால் நீங்கள் சர்ப்ப தோஷத்திலிருந்து தப்பித்தீர்கள். இல்லாவிட்டால், அது உங்களின் அடிதாங்காமல் உயிர்விட்டால், சாபம் ஈந்துவிட்டு இறக்கும்.

காலனான ராகுவுக்கும், சர்ப்பமான கேதுவுக்கும் இடையில் கிரகங்கள் இருப்பது கால சர்ப்ப தோஷம் எனப்படும். கால சர்ப்ப தோஷம் என்பது ராகு, கேது ஆகிய இருபாம்புக்களுக்கிடையே மற்ற ஏழு கிரகங்களும் அடைபட்டு இருப்பதாகும். இது ஜாதகத்தில் உள்ள நல்ல யோகங்களை நசுக்கி கெடு பலன்களை தரும் என்று ஐதீகம். ராகு, கேது இருவரும் விஷம் உள்ள பாம்புகள். இவர்களுக்கு இடையே சிக்கி முன்னும் பின்னும் இவர்களின் விஷத்தால் தாக்கப்படுவதால் கிரகங்கள் செயல் இழக்கின்றன என்பது கருத்து. ராகுவிற்கு பாம்பின் உடல் குணத்தால் வாலில் விஷம், கேதுவிற்கு பாம்பின் தலையானதால் தலையில் விஷம். இந்த அடிப்படையில் கால சர்ப்ப தோஷம் அமைகிறது.

சர்ப்ப தோஷம் என்பது திருமணத்தில் தடைகள், திருமணம் அமைவதில் தடைகள், திருமண வாழ்க்கை ஆகியவற்றில் தடைகள் ஏற்படும்.

## பரிகாரங்கள் :

ராகுகாலங்களில் அம்பாள் சன்னதியில் எல்லாநாளும் வரும் ராகுகாலத்தில் எலுமிச்சையில் தாமரைநூலில் நெய்தீபம் ஏற்றி வழிபட்டால் தோஷம் விலகும்.

கால பைரவரை வழிபட்டால் இந்த கால சர்ப்ப தோஷத்திற்கு பரிகாரம் கிடைக்கும்.

கால சர்ப்ப தோஷத்திற்கு குலதெய்வ வழிபாடு, பிறகு மனதளவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வது, ஆதரவற்றவர்களுக்கு உதவுவது என்றெல்லாம் செய்தாலே கால சர்ப்ப தோஷத்திற்கு பலன் கிடைக்கும்.

சூரியகிரகணமும், சந்திர கிரகணமும் வரும் நாட்களில் திருக்காளஹஸ்தி கோவிலில் உள்ள சிவபெருமானை வழிபட்டால் நன்மை கிடைக்கும். அல்லது ஏழை எளியோருக்கு அன்னதானம், வஸ்திரதானம் செய்தால் தோஷத்தினால் ஏற்படும் தீமைகளில் இருந்து விடுபடலாம்.





www.aanmeegamalar.com

# தீய தலையெழுத்தை மங்களகரமாக மாற்றும்

# திருப்பட்டூர் பிரம்மபுரீஸ்வரர்



பிரம்மன் இவ்வுலகத்தை படைக்கும் ஆற்றலை சிவனிடமிருந்து பெற்றிருந்தார். தன்னைப் போலவே, பிரம்மனுக்கும் சம அந்தஸ்து கொடுக்கும் வகையில் ஐந்து தலைகளை அவருக்கு கொடுத்தார். படைப்புத் தொழிலில் அனுபவம் பெற்ற பிரம்மன், தன்னையும், சிவனையும் ஒன்றாகக் கருதி ஆணவம் கொண்டார். அவருக்கு பாடம் புகட்ட விரும்பிய சிவன், “ஐந்து தலை இருப்பதால் தானே அஞ்சுதல் இல்லாமல் இருக்கிறாய்,” எனக்கூறி, ஒரு தலையைக் கொய்து விட்டார். படைப்புத்தொழிலும் பறி போனது. நான்முகனான பிரம்மா, இறைவனிடம் தனது தவறுக்காக சாப விமோசனம் கேட்டார்.

பூலோகத்தில் திருப்பட்டூர் என்ற தலத்தில் குடிகொண்டிருக்கும் தன்னை 12 லிங்க வடிவில் (துவாதசலிங்கம்) வணங்கி, சாப விமோசனம் பெற சிவன் அருள் செய்தார். மேலும், பிரம்மனின் தலையெழுத்தை மாற்றி, மீண்டும் படைப்புத்தொழிலை அருள்வதாகக் கூறினார். பிரம்மனும், இங்கு வந்து துவாதச லிங்க வழிபாடு செய்து சாபம் நீங்கப் பெற்றார்.

“என்னை மகிழ்வித்த உன்னை வழிபடுகிறவர்களின் தீய தலையெழுத்தை மங்களகரமாக மாற்றுவாயாக, என வரமும் கொடுத்தார். அன்று முதல் இந்த பிரம்மன், தன்னை வழிபடும் பக்தர்களின் தலையெழுத்தை மாற்றி அருள் செய்கிறார்.

பிரம்மன் இத்தலத்தில் சிவனை வழிபட்டதால் பிரம்மபுரீஸ்வரர் என சிவனுக்கு பெயர் ஏற்பட்டது. அம்பாள் பிரம்மநயாகி அல்லது பிரம்ம சம்பத்கவுரி எனப்படுகிறாள்.

அட்சமாலை மற்றும் கமண்டலத்துடன் பிரம்மா இங்கு இருக்கிறார். குருபகவானுக்குரிய அதிதேவதை பிரம்மா என்பதால், குரு தோஷ நிவர்த்திக்காக வியாழக்கிழமைகளில் விசேஷ பூஜை நடக்கிறது. மேலும், திங்கள் கிழமை, திருவாதிரை, புனர்பூசம், சதயம் மற்றும் ஜென்மநட்சத்திர நாட்களில் பக்தர்கள் இவரை வணங்குவது விசேஷ பலன் தரும். குருபெயர்ச்சியன்று பிரம்மாவிற்கு பரிகார யாகபூஜை நடக்கும்.

இங்கு பங்குனி மாதத்தில் பத்துநாள் விழா நடக்கும். பிரம்மன் வழிபட்ட ஷோடசலிங்கம் (பதினாறு பட்டை உடையது) தனி மண்டபத்தில் உள்ளது, பிரம்ம சாப விமோசனம் பெற சிவன் அருள் செய்த தலம். சிவன் கோயிலாக இருந்தாலும் இங்கு பிரம்மனுக்கு பிரம்மாண்டமான சிலையுடன், தனி சன்னதி உள்ளது. காலபைரவர் இங்கு மேற்கு நோக்கி உள்ளார். கோயிலை வலம்வரும் போது, சிவன் சன்னதி கோஷ்டத்திலுள்ள தெட்சிணாமூர்த்தி (குரு), அடுத்து அருகில் தனிசன்னதியிலுள்ள பிரம்மா, அடுத்து சிவன் சன்னதி கோஷ்டத்திலுள்ள விஷ்ணு, அதன்பின் மூலவர் பிரம்மபுரீஸ்வரர் (மகேஸ்வரர்) என வரிசையாகத் தரிசிக்கலாம். இந்த அமைப்பு மிக விசேஷமானது. திறக்கும் நேரம்: காலை 7.30 மதியம் 12 மணி, மாலை 4 இரவு 8 மணி. வியாழனன்று காலை காலை 6 மதியம் 12.30 மணி.

இது தஞ்சாவூர் கோயிலுக்கும் முற்பட்டதாக தெரிய வருகிறது. இங்குள்ள நந்தியை தடவிக் கொடுத்தால், நிஜ காளையை தடவிக் கொடுத்த உணர்வு ஏற்படுகிறது, பிரதோஷ நாளில் இந்த நந்தியை மக்கள் மொய்ப்பர்.

தலையெழுத்தை மாற்றும் திருப்பட்டூர் பிரமதேவன் திருக்கோயிலின் சிறப்புகள்

1. சிவ பக்தியுடன் வாழ்ந்து வந்த வியாக்ரபாதர், சிவனாரை நோக்கி இந்த தலத்தில் தவம் செய்தார்.

2. இத்தலத்தில் உள்ள தீர்த்தக்குளத்து நீரை, எவர் கையில் எடுத்தாலும் அவர்களுக்கு கங்கையில் நீராடிய பலனும் கிடைக்கும்.





3. இத்தலத்தில் 3001 அந்தனர்கள் வேதங்களை அனுதினமும் பாராயணம் செய்ததால் அதில் உண்டான அதிர்வலைகள் அங்கிங்கெனாதபடி எங்குமாக பரவிக் கிடப்பதால் திருப்பிடவூர் எனப்பெயர்பெற்றது. திருப்பிடவூர் என்பதே காலப்போக்கில் திருப்பட்டூராக மாறியது.

4. இது காசிக்கு நிகரான தலம் மட்டுமல்ல. திருக்கைலாயத்திற்கு நிகரான தலமும் ஆகும். இத்தலத்தில் ஸ்ரீமந் நாராயணரை வணங்கி தொழுததால் ஆதிசேஷன் அடுத்த கணம் பதஞ்சலி முனிவராக மாறினார்.

5. கர்வத்தை ஒழிப்பவர்கள் மனதில் இறைவன் உறைவதும், அவனே இறைவனாக மாறிப் போவதும் இத்தலத்தில் நிகழும்.

6. திருக்கயிலாய ஞான உலா எனும் நூல் இத்தலத்தில் அரங்கேறியது.

7. சிவ பெருமான், தன் அடியவர்கள் பலரையும் இந்த தலத்திற்கு அழைத்து வந்து திருவிளையாடலை நிகழ்த்தி இருக்கிறார்.

8. சேர மன்னன் நாயானாரும், சுந்தரரும் நெகிழ்ந்து வணங்கிப் பேறு பெற்ற அற்புதமான இடம் இதுவாகும். மாசாத்தனார் ஓலை நறுக்குகளுடன் காட்சி தரும் விக்கிரகத் திருமேனியை கோவிலின் மூலமூர்த்தமாக இன்றைக்கும் இங்கு தரிசிக்கலாம்.

9. சிவபெருமான் பிரம்மனின் ஒரு தலையை கிள்ளி எறிந்த தலம் திருவையாறு அருகில் உள்ள திருக்கண்டியூர் தலத்திலாகும். அந்த பிரம்மன் பரிகாரம் தேடி கொண்டது திருப்பட்டூராகும்.

10. பிரம்மன் உருவாக்கிய பிரம்ம தீர்த்தக் குளம், சிவலிங்கச் சந்நிதிகளும் இங்கு அமைந்துள்ளன. இங்கு வழிபட்டால் 12 சிவாலயங்களுக்கு சென்று வழிபட்ட புண்ணியம் கிடைக்கும்.

11. பிரம்மபுரீஸ்வரர் கோவிலில் மாதாவாக பிரம்ம சம்பத்கவுரி கனிவு ததும்ப கருணை பொங்கக் காட்சி தருகிறாள். இவளுக்கு செவ்வாய், வெள்ளி கிழமைகளில் புடவை சார்த்தி வேண்டிக் கொண்டால் தடைப்பட்ட திருமணம் இனிதே நடைபெறும்.

12. பிரதோஷ நாளில் இங்கு ஒரே நேரத்தில் நந்திக்குச் செய்யப்படுகிற பூஜையையும், நரசிம்ம மூர்த்தியையும் தரிசிக்கலாம்.

13. ஏழேழு ஜென்ம பாவங்களை நீக்கி பஞ்சபூதங்களாக உறைந்து இத்தலத்து ஈசன் நம்மை காக்கிறார்.

14. பிரம்மாவை வணங்கும் போதே குரு தட்சிணாமூர்த்தியை தரிசிக்கலாம்.

15. குரு பகவானுக்கு அதி தேவதை யான பிரம்மா தனி சந்நிதியுடன் திகழும் தலம் இதுவாகும்.





www.aanmeegamalar.com

**இது காசிக்கு நிகரான தலம் மட்டுமல்ல. திருக்கைலாயத்திற்கு நிகரான தலமும் ஆகும். இத்தலத்தில் ஸ்ரீமந் நாராயணரை வணங்கி தொழுததால் ஆதிசேஷன் அடுத்த கணம் பதஞ்சலி முனிவராக மாறினார்**

16. இத்தலத்திற்கு திருப்படையூர் என்ற பெயரும் வழக்கத்தில் இருந்தது.

17. சுப்ரமணிய சுவாமிக்கு வஸ்திரம் சார்த்தி, சர்க்கரை பொங்கல் நைவேத்தியம் செய்து பிரார்த்தனை செய்தால் வியாபாரத்தில் வெற்றி கிடைக்கும்.

18. தலை எழுத்தையே மாற்றி அருளும் திருப்பட்டூரில் குடி கொண்டிருக்கும் சுப்ரமணியரை வணங்கினால் மோட்சம் நிச்சயம் கிடைக்கும்.

19. தேய்பிறை அஷ்டமி யில், ராகு கால வேளையில் காலபைரவரைத் தரிசித்து அவரின் வலது காதில் நம் பிரச்சினைகளைச் சொல்லி வணங்கு வதற்காகத்தான் இத்தலத்தில் கால பைரவரின் வலது காது வித்தியாசமாக உள்ளது.

20. இத்தலத்தில் கால பைரவருக்கு நேர் எதிரில் இருக்கும் கஜலட்சுமியை வணங்கினால் ஐஸ்வர்யம் கிடைக்கும்.

21. 20 ஆண்டுகளுக்கு முன்பு வரை திருச்சி, முசிறி மற்றும் துறையூர் என சுற்று வட்டார ஊர்களைச் சேர்ந்தவர்களுக்குக்கூட திருப்பட்டூர் என்கிற ஊரே தெரியாமல் இருந்தது. ஆனால் இன்றைக்கு இத்தலம் தமிழகத்தையும் கடந்த பெங்களூரு, ஆந்திரா முதலான மாநிலங்களையும் தாண்டி பிரபலமாகியுள்ளது.

22. இத்தலத்திற்கு வந்து காசி விஸ்வநாதரையும், பிரம்மபுரீஸ்வரரையும் கண்ணாரத் தரிசித்து வணங்குபவர்களுக்கு புத்துணர்ச்சி கிடைக்கும். புதிய சக்தியுடன் சிவத்தொண்டு புரிவர்.

23. திருப்பட்டூர் திருத்தலம் ஒரு காலத்தில் மிகச் செழிப்பாக இருந்தது. எப்போதும் வேத கோஷங்கள் காற்றில் நிரம்பி புண்ணிய பூமியாக திகழ்ந்தது.

24. பூணூல் கல்யாணம் எனும் சடங்கை இத்தலத்தில் செய்வது விசேஷம் ஆகும்.

25. திருபட்டூர் சுற்று வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் இங்கு வந்து அம்பாளின் திருவடியில் விதை நெல்லை வைத்து வணங்கி விட்டு, பிறகு அதை ஊர்வலமாக எடுத்துச்சென்று தங்களின் வயல்களில் விதைத்தால், தானியங்கள் செழிப்பாக வளர்ந்து லாபம் கொழிக்கும் என்கிறார்கள்.

26. இத்தலத்துக்கு வந்து பிரம்மாவின் திருச்சந்நிதியில் ஜாதகத்தை வைத்து மனதாரப் பிரார்த்திக்கும் பக்தர்கள், பிரார்த்தனை நிறைவேறியதும் வஸ்திரம் சார்த்தி நேர்த்திக் கடன் செலுத்துகின்றனர்.

27. 11 வியாழக்கிழமை தவறாமல் இங்கு வந்து தியானம் செய்தால் மன அமைதி கிடைக்கும் என்கிறார் இங்கு வரும் பக்தர் ஒருவர்.

28. வெள்ளைத் தாமரை சார்த்தி பிரம்மாவை வழிபட்டால் உடனடி பலன் கிடைக்கும் அதே போல் நீங்கள் பிறந்த நட்சத்திர நாளில் இத்தலத்தில் வழிபட்டால் புண்ணியம் நிச்சயம் சேரும்.

29. ஆடி சுவாதி நட்சத்திர நாளில், திருப்பட்டூர் வந்து மூன்று கோவில்களுக்கு சென்று தரிசனம் செய்யுங்கள். அப்படி தரிசித்த பலனை, அடுத்தடுத்த நாளிலேயே உணர்வீர்கள்.

30. ஒரேயரு முறை திருப்பட்டூர் தலத்தில் காலடி எடுத்து வையுங்கள். மனதின் அத்தனை துக்கங்களும் பறந்து, மனம், புத்தி, செயல், சிந்தனை யாவற்றிலும் ஓர் ஒழுங்கை, நேர்த்தியை, தெளிவை உணர்வீர்கள்.

– லட்சுமி சுப்பிரமணியம்,
திருச்சி மாவட்டம்

Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 7299992699





www.aanmeegamalar.com



# தைரியமாக நின்றால் உன் விதியை நீயே நிர்ணயிப்பாய்

கிடைக்கும் பயனை அளந்து பார்க்கும் நண்பர், அன்பைக் கொள்ளாமல் பொருளை மட்டுமே கொள்ளும் விலைமகள் போன்றவர் ஆவார். அவருடைய நட்பினை ஏற்றுக் கொள்ளாதீர்கள்.

❖ ❖ ❖

உலகில் உள்ள தீமைகளைப் பற்றியே நாம் வருந்துகிறோம். நம் உள்ளத்தில் எழும் நச்சு எண்ணங்களைப் பற்றி சிறிதும் கவலை கொள்வதில்லை. உள்ளத்தை ஒழுங்குபடுத்தினால் இந்த உலகமே ஒழுங்காகிவிடும்.

❖ ❖ ❖

எழுந்து தைரியமாக நின்றால், உன் விதியை நீயே நிர்ணயிப்பாய்.

❖ ❖ ❖

இறைவனுக்காகவே ஒவ்வொரு செயலும் நடைபெறட்டும். உண்பதும், உறங்குவதும், காண்பதும் ஆகிய அனைத்தும் அவனுக்காகவே.

❖ ❖ ❖

நமக்கென உள்ளதை பிறருக்குக் கொடுப்பதில் மகிழ்ச்சி உண்டாகும். பிரதி பலன் எதிர்பார்த்து செயலாற்றினால் நன்மை உண்டாவதில்லை.

❖ ❖ ❖

உங்களை உலகம் தூற்றினாலும், கொண்ட லட்சியத் திலிருந்து விலகாமல் உறுதியுடன் செயல்படுங்கள். நிச்சயம் உங்களால் சாதிக்க முடியும்.

❖ ❖ ❖

எஜமானனைப் போல செயல்படுங்கள். அடிமை உணர்வை கைவிட்டு சுதந்திரமாக பணிபுரியுங்கள். மகத்தான செயல்களைச் செயவதற்காகவே ஆண்டவன் நம்மை படைத்திருக்கிறான். உயர்வான செயல்களைச் செய்தால் வாழ்க்கை பயனுடையதாகும்.